Two Tamil Farces

பால்ய விவாகமும்
சீர்திருத்தஞ் செய்பவரின் சங்கடங்களும்

Early Marriage and the Difficulties of a Social Reformer

வரதக்ஷிணையின் கொடுமையும்
கல்வியின் திறமையும்

The Tyranny of the Dowry System and the Triumph of Culture

with a Foreword by the Honourable Justice
E. PAKENHAM WALSH, I. C. S.

2 .. 1932

By

M. V. SUBRAHMANYAM, M. A., L. T.,
Lecturer in History,
St. John's College, Palamcottah.

-ht] Copyright [Postage Extra

...COTTAH PRINTING PRESS
1932

Y15:4-18
N32
59205

FOREWORD

BY

THE HONOURABLE JUSTICE

E. PAKENHAM WALSH, I.C.S.,

Of these two Tamil Farces I had the pleasure of witnessing the performance of one, that which deals with the Sarda Act. It is a very amusing and witty description of the difficulties in the way of the Social Reformer, and of the truth of the saying that "a man's enemies shall be they of his own household". How our Social Reformer in the play outwits his principal opponent, his wife, the play shows. The other farce which was performed at about the same time, but which I had not the pleasure of seeing, is I am told, equally good. Mr. M. V. Subrahmanyam has a serious purpose behind the fun of these farces, and it is probable that reforms in social customs will more easily be brought about by gentle banter than by mere denunciation. "*Quid vetat ridentem dicere vera*".

I wish the book all success.

Serles Gardens,
Adyar,
18th March 1932

E. PAKENHAM WALSH

2- 1932

715:418
N32
59205

2745
894812

PREFACE

The farces published here were first written by me for the purpose of being staged at two functions in Palamcottah. The first was written for a Variety Entertainment in aid of the Trinity Church Building, Palamcottah, and the second for a Variety Entertainment in aid of the District Flood Relief Fund. The first farce was staged by me and my friends in the St. John's College Hall, Palamcottah, on the 4th and 5th Dec. 1931 and the second in the St. Xavier's College Hall, Palamcottah, on the 9th January, 1932 under the presidency of the District Collector, A. C. Woodhouse, Esq. The popularity of the first farce may be seen from the fact that the members of the Tinnevelly Bar Association staged it during an 'At Home' given to Mr. Newsam, I.C.S., District and Sessions Judge, on the eve of his departure on furlough. The success of the second farce may be seen from the fact that at the request of Dr. and Mrs. Manuel of Tuticorin, my friends and I staged it for a second time in the course of a grand Variety Entertainment in aid of the Maternity and Child Welfare Centre at the Tuticorin Electric Theatre on the 27th May 1932 under the presidency of E. W. Bouchier, Esq., I. C. S. Sub-Collector, Tuticorin.

Since staging the farces at Palamcottah I have received several letters asking for copies of farces, and the great demand for them has encouraged me to publish them in this form. My object is to use the stage to reform society. I believe that the best way to remove some of our evil customs is to make people

see their absurdity, and laugh at them. I have adopted colloquial Tamil interspersed with English in the farces so that the acting could be more natural and amusing than if they were written in literary Tamil.

It was very kind of the Honourable Justice E. Pakenham Walsh, I. C. S., to have written so appreciative a Foreword to my farces. The words of appreciation in his Foreword are a source of great encouragement to me, and I thank him heartily for readily responding to my request to write a Foreword to my farces.

In the preparation and staging of these farces I received valuable suggestions and considerable help from Mr. L. D. Srinivasagam, B. A. (Lecturer in Logic, St. John's College, Palamcottah,) and Mrs. L. D. Srinivasagam. I have personally acknowledged my debt to them and I take this opportunity of thanking them heartily for all the valuable help they gave me in the preparation of these farces.

To all my friends who helped me in staging the farces, I express my warm gratitude and it is indeed no exaggeration to say that without their splendid histrionic talents on the stage, my farces could not have become popular.

Those who wish to stage my farces must obtain my permission before doing so. Rights of translation are reserved.

Palamcottah,
1st June, 1932.

M. V. SUBRAHMANYAM

பால்ய விவாகமும் சீர்திருத்தஞ் செய்பவரின் சங்கடங்களும்

Early Marriage and the Difficulties of a Social Reformer

பால்ய விவாகமும் சீர்திருத்தஞ் செய்பவரின் சங்கடங்களும்

Early Marriage and the Difficulties of a Social Reformer

A Tamil Farce

நாடக பாத்திரங்கள்

திவான் பஹதூர் ராஜசேகரய்யர்	... வக்கீலும், சீர்திருத்த சபையின் (Social Reform League தலைவரும்)
தேவராயன்	... ராஜசேகரய்யரின் சிநேகிதனும், சீர்திருத்த சபையின் (Social Reform League) காரியதரிசியும்
வல்லபஜோஸ்யர்	... ஒரு ஜோஸ்யர்
லலிதம்	... ராஜசேகரய்யரின் மனைவி
லெக்ஷ்மி	... ராஜசேகரய்யரின் புதல்வி
மிஸ். சுலோசனா	... சார்தா மசோதாவின் (Sarda Bill) நன்மைகளை பிரசாரஞ்செய்பவள்
குறத்தி	... குறிசொல்பவள்
குறவன்	... குறத்தியின் புருஷன்.

(The characters in the farce are entirely imaginary and no reference to living persons is intended.)

பால்ய விவாகமும் சீர்திருத்தஞ் செய்பவரின் சங்கடங்களும்

Early Marriage and the Difficulties of a Social Reformer

முதல் அங்கம்

காட்சி 1

திவான் பஹதூர் ராஜசேகரய்யரின் வீட்டில் ஓர் அறை

(ராஜசேகரய்யர் ஒரு புஸ்தகத்தை படித்துக்கொண்டிருக்கிறார்.)
(தேவராயன் வருகிறான்.)

ராஜசேகரய்யர்:-Hullo! What is the news?

தேவராயன்:-Sir, இன்று சாயங்காலம் நம்ம Social Reform League auspices-ல் ஒரு meeting Sarda Bill-ஐ support பண்ண arrange பண்ணியிருக்கிறேன். நல்ல கூட்டம் வருகிறதற்கு நல்ல speakers arrange பண்ணியிருக்கிறேன். Indians-ல் Mr. முத்துகிருஷ்ணய்யரும், Mr. உமையொருபாகம் பிள்ளையும், Europeans-ல் Mr. Critic, Mr. Eloquent and Mr. Bray-ம் இன்று evening Sarda Bill-ஐ support பண்ணி பேசும்படி வேண்டியிருக்கிறேன். Ladies' representatives ஆக மிஸ். சுலோசனாவும், Mrs. Fairplay-ம் பேசுவார்கள். நீங்கள் இன்று சாயந்திரம் மீட்டிங்கில் preside-பண்ணனும்.

ராஜ:-I have no objection to preside. But what is the use of asking those Europeans to address an Indian audience on the Sarda Bill?

தேவ:-அந்த European speakers நன்றாய்ப் பேசுவார்கள். அவர்கள் arguments ரொம்ப convincing ஆக இருக்குமென்று அவர்களை பேசச் சொல்லியிருக்கிறேன். அவர்களை யெல்லாம் போட்டால்தான் நமக்கு நல்ல crowd வரும். Meeting ரொம்ப representative-ஆக இருக்கும். அந்த Europeans இருக்கிற போது நாம் Sarda Bill-ஐ support பண்ணி resolution கொண்டுவந்தால் ஒருவரும் oppose பண்ணமாட்டார்கள். நீங்கள் இன்று மீட்டிங்கில் preside பண்ணவேண்டும்.

ராஜ:--Mr. Devarayan, என்னை இன்று மாத்திரம் excuse பண்ணிவிட்டால் தேவலை. I am busy with a big Zamin case.

தேவ்:--இல்லை. தாங்கள் அப்படி சொல்லக்கூடாது. நீங்கள் ரொம்ப நாளாய் Social Reformer and besides, you are the President of the Social Reform League.

ராஜ:--Mr. Sundaram Aiyer, M.A., M.L., M. L. C.ஐ கேட்கிறதானே! அவர் Social Reformer. Leading Advocate and an M. L. C. to boot. அவர் மீட்டிங்கில் preside பண்ணினால் ரொம்ப கௌரதையாயிருக்குமே. You please request him to preside.

தேவ:-எங்களைப்போல genuine Social Reformers க்கு அவரை இன்று மீட்டிங்கில் President ஆக போடுகிறதில் கொஞ்சங்கூட பிரியமில்லை. He is a big fraud. His reform consists in speeches only. போன வருஷம் அவர் ஒரு பெரிய மீட்டிங்கில் dowry system ஐ condemn பண்ணினார். அந்த மீட்டிங் முடிந்த இரண்டாம் மாசத்தில் தன்னுடைய son's marriage க்கு 5,000 ரூபாய் hard cash ஆக வாங்கினார். மீட்டிங்கிலே மட்டும் ரொம்ப vehement ஆக dowry system ஐ condemn பண்ணினார். பணம் கொஞ்சமா நெஞ்சமா—5,000 ரூபாய் வாங்கினார். Sir, அது மாத்திரமா! கல்யாணம் பண்ணினாரே அவருடைய பையனுக்கு வயது 14. பெண்ணுக்கு வயது 8. இவ்வளவு ஜோராக பேசி bold ஆக பணம் வாங்கின Social Reformer ஐ மீட்டிங்கில் preside பண்ணச்சொல்வதில் எனக்குப் பிரியமில்லை.

ராஜ:—நீ சொல்வது வாஸ்தவந்தான். அநேக Social Reformers பேசுவது ஒன்று செய்வது வேறு. Barking dogs seldom bite.

தேவ:--எங்க members எல்லாருக்கும் நீங்கள்தான் இன்று மீட்டிங்கில் preside பண்ணனுமென்று விருப்பம். நீங்கள் refuse பண்ணக்கூடாது.

ராஜ:--சரி. நீ அவ்வளவு சொல்லுகிறபோது நான் என்ன சொல்வது. When is the meeting?

தேவ:--This evening at 5 at the Edward Memorial Hall.

ராஜ:--All right. I shall be there precisely at 5 P. M.

தேவ:--Thanks very much.

(போகிறார்கள்.)

காட்சி 2

திவான் பகதூர் ராஜசேகரய்யரின் வீட்டில் ஓர் அறை

(ராஜசேகரய்யர் வருகிறார்.)

ராஜ:--அடியே. உன்னைத்தானே!

(லலிதம் வருகிறாள்.)

லலிதம்:-- என்னத்துக்கு என்னைக் கூப்பிட்டேள்?

ராஜ:—எனக்கு ஒரு மீட்டிங்க்கு சாயந்திரம் 4-45 க்கு போகணும். பரிசாரகனை விட்டு டிபன் 4-30 க்கு தயார் பண்ணச்சொல்லு.

லலி:—என்ன போங்கோ! இன்னிக்கு சாயந்திரம் வயிர மாணிக்கஞ்செட்டி கடைக்கு போகலாமென்று நேற்று தான் சொன்னேள். இன்னிக்கு காலம்பர கூட சொன்னேள். இப்போ மீட்டிங்கு போகணுமுனு சொல்லரேளே. நானும் ஒரு மாசமாய் வயிர அட்டிகை வாங்கித் தாருங்கோனு சொல்லரேன். நீங்களும் இப்படி ஏதாவது ஒரு சாக்குப் போக்குச் சொல்லிவிடுகிறீர்கள். நேற்றைக்குத்தான் ஏதோ மனசு வந்து இன்று சாயந்திரம் செட்டி கடைக்குப் போகலாமென்று சொன்னேள். அதற்குள்ளாக மனசு மாறி ஏதோ ஒரு மீட்டிங்க்கு போகணுமுனு சொல்லரேளே!

ராஜ:—நான் என்னடி பண்ணறது! இப்போதான் இந்த ஊர் சீர்திருத்த சபை காரியதரிசி தேவராயன் வந்து என்னை இன்று சாயந்திரம் ஒரு மீட்டிங்க்கு தலைமை வகிக்கும்படி சொல்லிவிட்டுப் போனான். நான் முதலில் மாட்டேனென்று சொன்னேன். ஆனால் அவன் கட்டாயப் படுத்தினான். நான் என்னடி பண்ணறது! நான் பத்து இடத்திற்குப் போகிறவன். பத்துப் பேருடைய தாக்ஷிண்யத்திற்காக நம்முடைய சொந்த ஜோலி முடங்கத்தான் செய்யும். இப்போ என்ன கெட்டுப்போச்சு! இன்றைக்கு வயிரமாணிக்கஞ் செட்டி கடைக்கு போகாட்டா என்ன? நாளைக்குப் போகிறது.

லலி:—இன்னிக்குத்தான் நல்ல நாள். நாளை பரணி. நாளன்னி கார்த்திகை. அதற்கு அடுத்தநாள் நக்ஷத்ரம் எனக்கு நேர் ஏழாம் நக்ஷத்ரம். இன்னும் ஒரு வாரத்திற்கு அப்புறம் நாளேயில்லை. இன்றைக்குத் தான் வாங்கணும்.

ராஜ:—நல்ல நாளாவது கெட்ட நாளாவது! எனக்கு இந்த ஜோஸ்யத்தில் நம்பிக்கையே கிடையாது.

லலி:—உங்களுக்குத்தான் வெள்ளைக்காரர் பழக்கமும், சீர்திருத்தஞ்செய்யும் இந்தியர்களின் பழக்கமுந்தானே! உங்களுக்கு எப்படி நம்முடைய ஜோஸ்யத்தில் நம்பிக்கை இருக்கப்போகிறது!

ராஜ:—ஒருவாரங் கழித்துத்தான் வயிர அட்டிகை வாங்கித் தரேனு சொல்லரேனே! அதற்குள்ளாக என்ன அவசரம்!

லலி:—நம்மைப்போல கொத்தவா ஆத்துக்குப்போனு ஒவ்வொத்தர் போட்டிண்டிருக்கிறதைப் பார்த்தா எனக்கு வெட்கமாயிருக்கு. கோபாலய்யர் ஆம்படையாள் கழுத்திலே இருக்கிற அட்டிகை மட்டும் 2000 ரூபாயாம். ராமஸ்வாமி அய்யர் ஸம்ஸாரம் போட்டிண்டிருக்கிற முத்துமாலை 2500 ரூபாயாம். அவர் குழந்தை கழுத்திலேயிருக்கிற பதக்கம் மட்டும் 1000 ரூபாயாம். அவாளென்ன நம்மைவிட ஒசத்தியா?

ராஜ:—நீ சொல்லர மாதிரியைப் பார்த்தா உனக்கும் 2500 ரூபாய்க்கு ஒரு வயிர அட்டிகை வாங்கிக்கொடுக்கச் சொல்லுகிறாய்ப் போலிருக்கே. நான் உனக்கு வயிர அட்டிகை வாங்கித் தரேனென்று சொன்னேனே ஒழிய இவ்வளவு விலையில் வாங்கித் தரேனென்று சொல்லவில்லை. ஏதோ ஒரு ஆயிர ரூபாயில் ஒரு அட்டிகை வாங்கலாமென்ற உத்தேசம். இப்பவோ எனக்கு நல்ல வரும்படி இல்லை. கக்ஷிக்காரர்களுக்கு மேல் வக்கீல்கள் பெருத்துப்போயிருக்கும் இந்த ஊரில் எனக்கு முந்தி மாதிரி வரும்படி வருகிறதில்லை. ஆனால் செலவுக்கோரளவில்லை. காசியிலுள்ள சர்வ கலா சாலைக்கு பணம் போதாதாம். அதற்காக என்னிடமிருந்து 1000 ரூபாய் வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள். இன்னும் எத்தனையோ பேர் எத்தனையோ நல்ல காரியங்களுக்கு என்னிடம் வந்து பணத்தை வாங்கிப் போய்விடுகிறார்கள்.

லலி:—உங்களை கண்டவாளுக்கெல்லாம் யார் பணத்தை அள்ளிவிடச்சொன்னது? போதுமான பணமில்லாமல் எதற்கு காசியில் சர்வகலாசாலை ஏற்படுத்தினார்கள்!

அந்தக் கலாசாலையை சேர்ந்தவர்கள் வந்தால் உங்களை பணம் அள்ளிவிடச்சொன்னாக்கும்!

ராஜ:—பத்து பெரியமனுஷான் ஒரு பொதுகாரியத்திற்கு பணம் வந்து கேட்கும்போது நான் என்னசெய்யறது? "தாக்ஷிண்யம் தனநாசம்".

லலி:—அது போனால் போகட்டும். நீங்கள் மீட்டிங்க்கு போங்கோ. ஆனால் வரும்போது வயிரமாணிக்கஞ் செட்டி கடையிலிருந்து 5, 6, வயிர அட்டிகை வாங்கிண்டு வாருங்கோ. அதிலே எது பிடிச்சிருக்கோ அதை வச்சண்டு மற்றதை திருப்பிடலாம்.

ராஜ:—சரி. உன்னிஷ்டம். நீ 4-30க்கு டிபன் தயார்பண்ணச்சொல்லு.

லலி:—ஆகட்டும்.

(இருவரும் போகிறார்கள்.)

காட்சி 3

திவான் பகதூர் ராஜசேகரய்யரின் வீட்டில் ஓர் அறை

(ராஜசேகரய்யரும் தேவராயனும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.)

ராஜ:—What is your impression of the meeting?

தேவ:—நீங்க preside பண்ண மீட்டிங்கைப்பற்றி கேட்கணுமா? Very successful meeting. Speeches எல்லாம் நன்றாயிருந்தது. அதிலே European speakers ரொம்ப நன்றாய் பேசினார்கள். ரொம்ப clear ஆகவும், convincing ஆகவும் பேசினார்கள்.

ராஜு:—வெள்ளைக்காரருக்கு இங்கிலீஷ் தாய்பாஷை. என்ன பிரமாதம்? என்னுடைய அபிப்பிராயத்தில் Indian speakers தான் நன்றாய் பேசினார்கள்.

தேவ:--இங்கிலீஷ் வெள்ளைக்காரருக்கு தாய்பாஷையாயிருக்கிறதினால் நன்றாய் பேசுகிறார்களென்றால், ஏன் நாமெல்லாம் தமிழில் நன்றாய் பேசக்கூடாது?

ராஜு:--அது நம்முடைய குற்றமல்ல. The present system of education is responsible. தமிழை பேணிப்பார் ஒருவருமில்லை. நம்ம University ல் தமிழை medium of instruction ஆக வைக்கட்டும். நம்முடைய graduates எல்லாரும் நன்றாய் தமிழில் பேசுவார்கள்.

தேவ:-- அதிருக்கட்டும். இன்று நாம் Sarda Bill ஐ support பண்ணி resolution pass பண்ணிவிட்டோம். We have thus shown that educated men are in full agreement with the Bill.

ராஜு:-Pious resolutions மட்டும் pass பண்ணினால் போராது. We must see that early marriage does not take place.

தேவ:-நாமெல்லாம் Sarda Bill-ஐ support பண்ணுகிறது பெரிய காரியமா? நம்ம ladies-ஐ convince பண்ணுகிறதுதான் difficult. அவர்களுக்கு education கொடுக்காதது defect.

ராஜு:-நம்ம ladies-க்கு Sarda Bill-னுடைய advantages ஐ point out பண்ணுகிறதற்கு நம்முடைய Lady Propagandist Miss Sulochana-ஐ அனுப்புவோம். I am sure she will convert our conservative ladies to the Sarda Bill.

தேவ:-எனக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை. நம்முடைய ladies ரொம்ப obstinate set of people. அதினாலே Miss Sulochana என்ன இனிமையாகவும், சாதுரியமாகவும் பேசினாலும் பயன்படாது. போதாக்குறைக்கு இந்த ஊரில் வைதிக பிராமணர்களெல்லாருஞ் சேர்ந்து இந்த தர்ம சபை ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த சபையின் ஆதரவிலேயும் Sarda Bill-ஐ oppose பண்ணி நடக்கும் கூட்டங்களுக்கு நம்ம Brahmin ladies கூட்டமாக போய்வருகிறார்கள். ஆகையினால் Sarda Bill-ஐ Indian Legislative Assembly-ல் pass பண்ணினால்கூட நம்ம people அந்த சட்டத்தை சட்டைபண்ணமாட்டார்களென்று என் புத்திக்குப்படுகிறது.

ராஜு:-அது சரிதான். Reform will have to come slowly. எத்தனையோ நூற்றாண்டுகளாக வழங்கி வரும் இந்த பால்ய விவாகத்தை ஒரு சட்டத்தினால் மாற்றுவது கொஞ்சம் சிரமந்தான். ஆனால் நம்ம மாதிரி leaders of the Social Reform movement-ஆவது நம்ம girls-க்கு early marriage செய்யக்கூடாது. சந்திரமய்யர் M. A., M. L., M. L. C. மாதிரி இருந்தால் நம்ம movement-க்கு கெடுதல் தான்.

தேவ:-என் விஷயத்தில் ஒரு தொந்திரவில்லை. எனக்கு குழந்தையில்லை. அதினால் early marriage in my family is out of the question. நீங்கள் கொஞ்சம் careful-ஆக இருக்கணும். உங்களுக்கு 8 வயதில் ஒரு பெண்ணிருக்கிறாள். உங்க wife ரொம்ப conservative. அதைத்தவிர நீங்கள் Social Re-

form meetings-க்கு போகிறபோது அவள் இந்து தர்ம சபை கூட்டங்களுக்குப் போகிறாள். உங்கள் சம்சாரம் குழந்தை லெக்ஷ்மிக்கு கல்யாணம்பண்ணணுமென்று சொல்லுவாள். பெண்பிள்ளைகளோ பிடிவாதம் பிடிக்கிறவர்கள். அதிலும் உங்க wife ரொம்பவும் பிடிவாதக்காரி என்று நீங்களே என்னிடம் எத்தனையோ தரஞ் சொல்லியிருக்கிறீர்கள். ஆகையினால் நீங்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாயிருக்கணும்.

ராஜ:-I am not Sundaram Aiyer. My wife may succeed in getting costly jewels for her, but she can't succeed in getting our 8 year old girl married. You will see that, Devarayan.

தேவ:—I hope you will succeed. Good night.

(போகிறார்கள்.)

காட்சி 4

திவான் பஹதூர் ராஜசேகரய்யர் வீட்டில் ஓர் அறை

(ராஜசேகரய்யர் வாசித்துக்கொண்டிருக்கிறார். லலிதம் லெக்ஷ்மியைக் கூட்டிக்கொண்டு வருகிறாள்.)

ராஜ:—நான் வாசிக்கிற இடத்தில் உனக்கு என்ன வேலை!

லலி:—நான் எப்ப வந்தாலும் சள்புள்ளு விழுறேளே?

ராஜ:—நீ வயிர அட்டிகை வாங்கித்தரச் சொன்னே. வாங்கியாய் விட்டது. இன்னும் ஏதாவது நகைக்கு அப்ளிக்கேஷன் போட வந்திருக்கிறாயா?

லலி:—நகை விஷயமாய் வரவில்லை. கல்யாண விஷயமாய் வந்திருக்கிறேன். சகுனத்தடைபோல சள்புள்ளு விழுறேளே!

ராஜ:—யார் கல்யாண விஷயமாய்?

லலி:—யார் கல்யாண விஷயமாவது? எல்லாம் நம்ம லெக்ஷ்மி கல்யாண விஷயமாய்த்தான்!

ராஜ:—நன்னாருக்கு! லெக்ஷ்மிக்கு இன்னும் 8 வயசுகூட ரொம்பவில்லையே! அதற்குள்ளே என்ன கல்யாணமடி! அதிலும் அவள் இப்பத்தான் 4-வது வகுப்பு படித்து வருகிறாள். அவள் படிப்பெல்லாம் முடியட்டும். அப்புறம் கல்யாணத்தைப்பற்றி யோசிப்போம்.

லலி:—நீங்களென்ன? லெக்ஷ்மி எம். ஏ. பாஸ்பண்ணர மட்டும் கல்யாணம் வேண்டாமென்ற உத்தேசமா? இந்த எம். ஏயும் எருமையும் நம்ம நாட்டு பொம்பநாட்டிகளுக்கு என்னத்துக்கு? பால் பண்ணின புருஷாளுக்கே வேலையைக்காணும்! அதிலும் நம்ம பிராமணாளுக்கு வேலையே கிடைக்க மாட்டேங்கிறது! ஏதோ கொஞ்சம் தமிழ் எழுதி படிக்கத் தெரிந்தாபோதாதாக்கும்? இப்ப பாருங்கோ நான் உங்களை கல்யாணம் பண்ணுகிறதற்கு முன்னால் தமிழ் பள்ளிக்கூடத்தில் வாசித்தேன். இப்போ எனக்கு 'சுதேச மித்திரன்' 'ஆனந்தபோதினி' முதலிய பத்திரிகைகளைப் படித்து விஷயங்கள் தெரிந்துகொள்ள சக்தியில்லையா? பெண்ணு லக்ஷணமாய், குடித்தனத்துக்கு பாங்காயிருக்கணும். இந்த இங்கிலீஷ் படிப்பெல்லாம் என்னத்துக்கு?

ராஜ:—அடி! நீ சிறு பெண்ணாயிருக்கும்போது அந்தக் காலத்து வழக்கத்தின்படி உனக்குக் கொஞ்சம் படிப்பு

உங்க அப்பா அம்மா போட்டார்கள். இந்தக்காலத்து நாகரீகத்தின்படி நம்முடைய பெண்ணுக்கு நல்ல இங்கிலீஷ் படிப்பு போடவேண்டாமா? சரி, நீ ரொம்ப ஜம்பமா பேசரையே! உன் கையிலே wrist watch இல்லேனு அழரேதா! உங்க அம்மா பாட்டி எல்லாரும் wrist watch தான் கட்டிண்டார்களாக்கும்! மோட்டார்காரில்தான் போனார்களாக்கும்! இந்தக் காலத்தில் ஒவ்வொரு பெண் என்னென்ன பாஸ்பண்ணரது! நம்முடைய அந்தஸ்துக்கும், மதிப்புக்கும் ஏற்றபடி நம்முடைய லெக்ஷிமி பி. ஏ. ஆவது பாஸ் பண்ணவேண்டாமா? அதற்கப்புறம் கல்யாணத்தைப்பற்றி யோசிப்போம்.

லலி:—நன்னாருக்கு! நம்ம ஜாதியிலே எல்லாரும் பெண்களுக்கு சின்னவயசிலே கல்யாணம் பண்ணறா! ஏன் நாமுஞ் செய்யக்கூடாது? சுந்தரமய்யராத்து பெண்ணுக்கு 8-வயசுகூட பூராவாகவில்லே. போன வருஷமே கல்யாணம் பண்ணிட்டா. அமிர்தமய்யராத்துப் பெண்ணுக்கு அப்பவே கல்யாணம் பண்ணிட்டா. கீழாத்து காமு இருக்காளோனே, அவள் பெண்ணுக்கு ஆறு வயசுகூட ஆகவில்லே. போன தை மாதத்திலேயே கல்யாணம் பண்ணிட்டா. ஏன் நம்ம லெக்ஷிமிக்கு இந்த தையிலே கல்யாணம் பண்ணக்கூடாது?

ராஜ:—மற்றவர்களெல்லாம் ஒரு தப்பிதஞ்செய்தால் நாமுஞ் செய்யணுமா? பால்ய விவாகம் மிகவும் கெடுதல். நம்ம குழந்தைக்குப் படிப்புக் கெட்டுப்போம். உடம்பும் கெட்டுப்போம். இப்ப என்ன லெக்ஷிமி கல்யாணத்துக்கு அவசரம்?

லலி:—நம்ம முன்னோர்களெல்லாம் பால்ய விவாகம் பண்ணலையாக்கும். அவர்கள் உடம்புக்கு என்ன குறை? எல்லாம் இந்தக்காலத்து நாகரீகத்தினால்தான் உடம்பு கெட்டுப்போகிறதேயொழிய பால்ய விவாகத்தினாலொன்றுமில்லே.

ராஜ:—நீ இந்த வம்பர் சபைக்குப் போய் நான் சொல்வதற்கெல்லாம் பதில் சொல்ல கற்றுக்கொண்டிருக்கிறாய்.

லலி:—நீங்க மாத்திரம் கிளப்புக்கு போகலாமாக்கும். நான் என் சிநேகிதிகள் சேஷி, சுப்பி, முத்து, காமு அவாளோடு ஒழிஞ்ச வேளையில் பேசப்படாதாக்கும்?

ராஜ:—அடியே! இதில் இன்னொரு விஷயமிருக்கிறது. நான் இந்த ஊர் Social Reform Leagueக்கு பிரஸிடெண்ட். நானே நீ சொல்லரமாதிரி நம்ம லெக்ஷிமிக்கு 8-வயதில் கல்யாணம் பண்ணினால் எல்லாரும் என்னை என்ன நினைப்பார்கள்? "உலைவாயை மூடினாலும் ஊர் வாயை மூடமுடியுமா?"

லலி:—நாம் நம்ம லெக்ஷிமிக்கு சீக்கிரம் கல்யாணம் பண்ணாமல் போனால்தான் பத்துபேர் பத்து சொல்லுவா! நம்ம லெக்ஷிமிக்கு "ஏதோ ஊனம். அதினால்தான் கல்யாணமாகவில்லே" என்று எல்லாரும் சொல்லுவார்கள். ஆனாலும் எனக்கு இந்த ஆற்றங்கரை குளத்தங்கரை வம்பு பொறுக்கவே முடியாது!

ராஜ:—உன் மாதிரி படிக்காத பொம்பனாட்டிகளுக்கென்ன? வம்பு தவிர வேறு என்ன ஜோலி? இப்ப பாரு. நம்ம இந்தியா சட்ட சபையில் சார்தா என்கிற ஓர் மஹான் ஒரு சட்டங்கொண்டு வந்திருக்கிறார். அதின்படி பெண்களுக்கு 14-வயதுக்கப்புறந்தான் கல்யாணஞ்செய்ய

வேண்டும். அந்தச்சட்டத்தை அநுசரித்து நேற்று மீட்டிங்கில்கூட நான் பேசினேன். அப்படி பேசிவிட்டு இந்த சமயம் நம்ம லெக்ஷிமிக்கு கல்யாணம்பண்ணினுல் உலகம் என்னை என்ன நினைக்கும்?

லெக்ஷிமி:-அம்மா, நேற்று எங்க வாத்திச்சியம்மாகூட பெண்களுக்கு வயதான பிற்பாடுதான் கல்யாணஞ்செய்யணுமென்று சொன்னுளம்மா.

லலி:—உங்க வாத்திச்சியம்மாவை படிப்புச்சொல்லிக் கொடுக்கச்சொல்லிற்ரு? கல்யாணத்தைப்பற்றிப் பேசச் சொல்லிற்ரு? நீ குறுக்கே ஒன்றுஞ் சொல்லாதே.

ராஜ:-தவிரவும் நான் அடுத்த சட்டசபை எலெக்ஷனில் ஒரு அபேக்ஷகராக நிற்கப்போகிறேன். நான் இந்த மாதிரி மீட்டிங்கில் ஒன்று பேசிவிட்டு, நம்ம லெக்ஷிமிக்கு கல்யாணம் 8-வயசில் செய்தால் எனக்கு எலெக்ஷன், ஆகாதடி!

லலிதம்:-அதெல்லாம் தப்பு. அவாத்து சந்திரமய்யர் இப்படித்தான் உங்க சீர்திருத்த சபையில் சேர்ந்து வரதக்ஷிணையைப்பற்றி கேவலமாக பேசி, இரண்டு கையாலேயும் 5000 ரூபாய் தன் பிள்ளை கல்யாணத்திற்கு வாங்கல்லையாக்கும்! அவரும் — என்னமோ சொல்லுரேளே அந்த லெச்ச கெட்ட சபை (Legislative Council) எலக்ஷெனில் ஜெயிக்கலையாக்கும். எலக்ஷெனில் ஜெயிக்கிறதற்கு சொல் நாணயம் வேண்டாம்; ராஜா நல்ல நாணயந்தான் வேண்டும். நீங்க நம்ம லெக்ஷிமிக்கு கல்யாணஞ்செய்துவிட்டு கல்யாணச் செலவோடு எலக்ஷெனில் செலவுசெய்தால், எலக்ஷெனுக்கு என்ன பிரமாதம்!

நீல:— சரி. Head Clerk post க்கு வந்த applications ளுடன் Commissioner துரை இப்போ இங்கே வருவார். நான் அவருடன் பேசிக்கொண்டிருப்பேன். நீர் உம்பாட்டு உம்முடைய ஜோலியை பார்த்துக்கொண்டிரும்.

சங்:— அப்படியே உத்தரவு.

(ஒருபக்கமாக உட்கார்ந்து எழுதிக்கொண்டிருக்கிறுர். Noise of a tap at the door)

President :— Come in, please.

(Enter Commissioner, Bertrand Shaw with a file of applications.)

Commissioner :— Good morning.

Pr :— Good morning, Mr. Shaw. When did you advertise for the post of the Head Clerk, and how many applications have you received so far?

Com :— I sent the advertisement only a few days back, but even before the advertisement appeared in the papers, I received 50 applications.

Pr:— How!

Com:— When we dismissed the Head Clerk for misappropriation of accounts, 50 unemployed young men applied for the post, and since the advertisement appeared, I have received 200 applications.

Pr :—Such a large number in spite of the fact that the scale of pay offered is only 80—2 (biennial)-90.

Com :—Yes, the large number of applications for this unenviable post only shows the gravity of unemployment.

Pr :—Mr. Shaw, have you sorted out the applications?

Com :—Yes, sir. Several B. A., B. L's have applied for the post. But I have sent them to the W. P. B. for I have no faith in a lawyer sticking to the post of a Head-Clerk. He may accept it, if it is offered and when better times come he may kick off the job. So, Mr. President, I have rejected all the applications from B. A., B. L's. That leaves me with only 100 applications and from that lot I have chosen the application of one 'Chandree' 'Chandree' 'Chandrekesari' aiyar, a brilliant product of the Madras University, first class in History Honours and first in the Presidency.

Pr :—But he is a Brahmin. Oh! I can't appoint a Brahmin.

Com :—Mr. President, if you care for efficiency you will have to appoint this Brahmin applicant. In my official career I have found Brahmin officials and clerks always efficient and trustworthy. We should not be carried away by communal considerations.

Pr:— I don't agree with you, Mr. Shaw. The Brahmins have in the past held all the important posts. I don't see why we should not give chances to Non-Brahmins.

Com:— If in the past the Brahmins had all offices it was no fault of theirs. They were the first to take advantage of English education and they reaped the reward.

Pr:— That may be. But what I am concerned about is the welfare of the Non-Brahmin community to which I have the honour to belong.

Com:— If that be so, I have no alternative but to obey you, but I do so under protest.

Pr :— You please put up the application of one Ramachandra Mudaliar who I understand is the nephew of the President of the Malabar District Board.

Com :— Yes, sir. (*The Commissioner searches in the application file and takes out the application of Ramachandra Mudaliar.*)

Here it is, sir. I shall read his application.

"Palghat, 17—9—30.

Most Honoured Sir,

With reference to the advertisement that appeared in the 'Madras Mail' of the 16th inst. I beg to apply myself for the post of the Head Clerk. I am a Non-Brahmin and belong to a respectable Mudaliar family. My uncle is the President of the Malabar District Board. I have passed Part II of the B. A. Degree Examination (Old Regulations) my optional subject being Philosophy. I am a good sportsman having represented the Presidency College in Hockey, Football and Cricket matches. If you are satisfied with my qualifications, *you may call on me.* (*Here the Commissioner laughs*).

Your's obediently,

S. RAMACHANDRA MUDALIAR.

Mr. President, your man says that we may 'call on him'. You know what he means. Besides, he has put an apostrophe after 'your'. No wonder the Madras University has plucked him in English. You want to appoint this young man!

Pr:— Yes. After all for a Head Clerk's post a semi-graduate will do. The applicant, Mr. Shaw, is a good sportsman.

Com:— On the other hand, it is a disqualification. On days when interesting cricket, hockey and foot-ball matches are played, your man will apply for leave. He won't work on those days.

Pr:— I consider proficiency in games as a good qualification whatever may be its necessary evils. I am a party man. I am standing for the ensuing Legislative Council Elections and if I do not favour the young men of my own community what chance have I in the Elections? So, Mr. Shaw, you please send a wire immediately to that young man offering him the post and asking him to join duty forthwith.

Com:— I have already given you a bit of my mind. But I will certainly obey orders. I shall send orders to your man. Good-morning. (*Both go*).

காட்சி 2

சந்திரசேகரய்யரின் வீட்டில் ஓர் அறை

(சந்திரசேகரய்யர் மனக்கவலையுடன் நாற்காலியில் சாய்ந்து கொண்டிருக்கிறார். சகுந்தலா வருகிறாள்.)

சகுந்:—ஏன் ஒரு மாதிரி இருக்கேள்?

சந்திர:—நான் உன்னிடஞ் சொல்லுவதற்கென்ன? நான் எத்தனையோ வேலைக்குப் பிரயத்தனம் பண்ணியும் ஒன்றுங் கிடைக்கவில்லை. நான் Honours பரீக்ஷையில் முதல் கிளாஸில் தேறினவுடனே பெரிய உத்தியோகம் கைக்கெட்டியதுபோல் துள்ளினேன். I. C. S. என்ன F. C. S. என்ன, இது மாதிரியெல்லாம் உத்தேசித்தேன். ஆனால் Medical Board என்னை Unfit-ஆ தள்ளிவிட்டார்கள். பிறகு College Professor வேலைக்குப் பிரயத்தனம் பண்ணினேன். காலேஜுகள் கொஞ்சமாகத்தானிருக்கிறது. அதிலும் இருக்கிற காலேஜ்களில் சிலவற்றை எடுக்கப்போகிறபோது நமக்கு எங்கே வேலை கிடைக்கப்போகிறது! காலேஜில் professor வேலைதான் கிடைக்கவில்லையே, High school teacher ஆ போகலாமென்றால், L. T. வேணுமென்கிறார்கள். L. T. படிக்க Saidapet Teachers' College போகலாமென்று application போட்டேன். இரண்டு வருஷமாவது High School-ல் வேலை பார்க்கவேணுமாம். அதினாலே admission கிடைக்கவில்லை. அப்புறம் உன் இஷ்டப்படி Collectorate-ல் வேலைக்கு application போட்டு Collector-ஐப்போய் பார்த்தாக்க அவர், "you belong to a community which is

already over represented in my office" னு, என்னுடைய application-ஐ reject பண்ணிவிட்டார். போயும் போயும் போக்கத்த Madras Corporation Head Clerk வேலைக்கு apply பண்ணினேன். அது கூட கிடைக்கவில்லை. நம்மை விட்டு விட்டு ஏதோ ஓர் Non-Brahmin semi-graduate ஐ appoint பண்ணிட்டார்களாம். என்னடி பண்ணரது? எங்கப்பா சேர்த்து வைத்த 5000 ரூபாயில் 4000 ரூபாயை என்னுடைய படிப்புக்காக செலவழித்தாய்விட்டது. இன்னும் 1000 ரூபாய்தான் பாக்கியிருக்கு. இந்த அழகில் நம்முடைய பெண் பத்மாசினிக்கு கல்யாணம் பண்ணனுமென்று எங்க அம்மா, மாமா, அத்தான், எல்லாரும் சொல்லரா. அதற்கு ரூபாய்க்கு நான் எங்கே போகிறது. நம்ம பாழும் ஜாதியிலே வரதக்ஷிணை வழக்கமிருக்கு. நம்முடைய பத்மாசினியின் அழகுக்கும் புத்திக்கும் படிப்புக்கும் ஏற்ற மாப்பிள்ளை பார்க்கலாமென்றால், குறைந்தது ரூபாய் 5000 வேண்டும். அதற்கு நான் என்னடி பண்ணரது?

சகுந்:—நீங்களொன்றுக்கும் வருத்தப்படவேண்டாம். எல்லாம் தலைவிதி. உங்களுக்கு வேலை கிடைக்காதது என்னுடைய துரதிர்ஷ்டந்தான். நம்முடைய பத்மாசினி கல்யாணத்தைப்பற்றி அவ்வளவு அவசரமென்ன? அவளுக்கு இப்பத்தானே ஏழு வயசாகிறது!

சந்திர:—எனக்கு நம்ம பந்துக்கள் பிடுங்கல் சகிக்க முடியவில்லை. எல்லாரும் பத்மாசினிக்கு சீக்கிரம் கல்யாணம் பண்ணனும்னு சொல்லரார்கள். நம்ம கஷ்ட திசையையறிந்து அவாளெல்லாம் "டிப்டி கலெக்டர் சிவராமய்யருக்கு இளையாளா கொடுக்கிறதுதானே, அவருக்கோ

மூத்தாகுழந்தை யொன்றுமில்லை. பெரிய சம்பளகாரர்" என்று சொல்லரா.

சகுந்:—யாரு, அந்த அள்ளு கிழம் சிவராமய்யருக்கா?

சந்திர:—அவருக்கு 50 வயதாகிறது. நான் இப்படி சொல்வதினால் எனக்கு அவரை மாப்பிள்ளையாக்கிக் கொள்வதில் சம்மதமென்று நினைக்காதே. நமது வறுமையின் கொடுமையினால் நமது பந்துக்களெல்லாம் அவருக்கு பத்மாசினியைக் கல்யாணம்பண்ணிக்கொடென்று கட்டாயப்படுத்துகிறார்கள். எங்கம்மாவும் கட்டாயப்படுத்துகிறாள். இதையெல்லாம் கேள்விப்பட்டு சிவராமய்யரும் என்னைக் கண்டபோதெல்லாம் நம்ம பத்மாசினியை இரண்டாந்தாரமாக கேட்கிறார். அவருடைய தொந்தரவு பொறுக்கமுடியாமல் நான் அவரை இன்று வந்து கலந்தண்டு போங்கோனு சொன்னேன். அவர் 12-மணிக்கு வரேனார். வர time ஆச்சு.

(கதவு தட்டுகிற சப்தம் கேட்கிறது.)

அவர்தான் போலிருக்கு. நான் போய் அவரைக் கூட்டிக் கொண்டு வருகிறேன்.

(வெளியில் போய் அவரை அழைத்து வருகிறான். சிவராமய்யருடன் வில்லைபோட்ட சேவகனும் வருகிறான்.)

இவள்தான் என் சம்சாரம். நல்ல English knowledge உண்டு. She is a cultured girl.

சிவராமய்யர்:—நீ நல்ல பாக்கியசாலி. "கம்பன் வீட்டுக்கட்டுத்தறியும் கவி பாடு"மென்று சொன்னாப்போல நீ ஒரு brilliant young man, உன் wife, daughter, அவாளுடைய culture-க்குக் கேட்கணுமா? நம்ம குட்டி எங்கே?

சகுந்:—குட்டி இங்கேயில்லை. பள்ளிக்கூடம் போயிருக்கிறாள்.

சந்திர:—இல்லேடி. இங்கேதானே விளையாடிக்கொண்டிருந்தாள்? பத்மா! பத்மா!

(பத்மாசினி உள்ளிருந்து ஓடிவருகிறாள்.)

பத்:—என்னப்பா! என்னை எதற்காக அழைச்சேள்!

சந்திர:—(சிவராமய்யரைக்காட்டி) இவர் உன்னைப் பார்க்கணுமென்று சொன்னார். அதற்காக கூப்பிட்டேன்.

பத்:—இந்தத்தாதா யாரு; அப்பா?

சகுந்:—குழந்தைகூட அவரைப்பார்த்து தாதானு சொல்லராள். அவருக்கு இவளை கல்யாணம் பண்ணும்னு உங்க பந்துக்கள் சொல்லராங்களே!.

சந்திர:—Sir, I have left everything to my cultured wife; she will answer for me.

சகுந்:—(சிவராமய்யரைப்பார்த்து) நான் உங்களுடன் நேரில் பேசுவது ஜாதி வழக்கத்திற்கு விரோதமாக விருந்தபோதிலும், நீங்கள் வந்திருக்கிற விஷயம் முக்கியமானதாயிருப்பதாலும், அந்த விஷயத்தில் என்னுடைய அபிப்பிராயம் தெரிவிப்பது அத்தியாவசியமாயிருப்பதாலும், நான் உங்களிடம் நேரில் பேசத்துணிந்தேன். எங்காத்துக்காரர் உங்களை இங்கே வந்து கலந்து போகும்படி சொன்னதினால், நீங்கள் அவர் எங்கள் குழந்தையை உங்களுக்கு கல்யாணஞ் செய்வதற்கு சம்மதித்தாரென்று நினைக்கவேண்டாம். பந்துக்களுடையவும், உங்களுடையவும் தொந்திரவு பொறுக்கமுடியாமல் உங்களை இங்கு வந்து கலந்து கொண்டு போகச் சொன்னாரே யொழிய வேறன்று. உங்க வயசென்ன! எங்க பத்மாசினி வயசென்ன! உங்களுக்கு இத்தனை வயசாகியும் கல்யாணத்தின்மேல் யோசனை போகிறதே! தாங்கள் தயவுசெய்து எங்க பத்மாசினியைக் கல்யாணம் பண்ணுகிற நினைப்பை உடனே விட்டுவிடுங்கள்.

சிவ:—உங்க குட்டியை எனக்குக் கல்யாணம் பண்ணிக்குடுத்தேன்னா நான் கலெக்டரிடஞ் சொல்லி உங்காத்துக்காரருக்கு வேலை வாங்கித்தருவேன். கலெக்டர் என்னிடத்திலே ரொம்ப நம்பிக்கை. நான் என்ன பேப்பரை நீட்டினாலும் உடனே கையெழுத்துப் போட்டுவிடுவார். அதினாலே, இப்ப நம்ம பிராமணாளுக்கு வேலை கொடுக்கப்படாதுனு ஒரு Communal G. O. வந்திருந்தபோதிலும், நான் உங்க ஆத்துக்காரரை Probationary Revenue Inspector ஆக appoint பண்ணி அந்த order ஐ Collector இடம் நீட்டினால் உடனே அவர் கையெழுத்துப் போட்டுவிடுவார். நீங்கள் வேறு யாராவது மாப்பிள்ளை பார்த்தால் வரதக்ஷிணை கொடுக்கணும். எனக்கு ஒரு பைசாக்கூட கொடுக்கவேண்டாம். யோசித்து சொல்லுங்கோ!

(சந்திரசேகரய்யரின் தாயார் ரத்னம்மாள் வருகிறாள்.)

ரத்னம்மாள்:—நீங்க பேசரதையெல்லாம் நான் அடுக்குளையிலிருந்து கேட்டுண்டிருந்தேன். அடி சகுந்தலா, நீ வட்டி பொம்பநாட்டியா, லக்ஷணமா! அவர் பெரியவர் டீவட்டி கலெக்டர், வில்லையும் போட்டுக்கொண்ட சேவகனுடன் வந்திருக்கிறார். இப்படி பேசறையே! இந்த இங்கிலீஷ் படிப்புப் போட்டாலே நம்மநாட்டு பொம்பநாட்டிகளுக்கு தலைகொழுத்துப்போகிறது. "தானாக வந்த சீதேவியை காலாலேஉதைத்து தள்ளப்படாது" என்று பழமொழியிருக்கு — டீவட்டி கலெக்டர்!— சின்ன வேலையா! சம்பளம் 500 ரூபாயாம். மேல்வரும்படி நிறையவாதுனு சொல்லிக்கிறா. அவராக வந்து பண

மொன்றும் வேண்டாமுனு சொல்லரா—இவள் வந்து லெச்சர்பண்ணரா!—ஏண்டா சந்துரு, நம்ம குட்டியை இவருக்குக் கொடுக்க வலிக்கிறதா? உனக்கு வேலை பண்ணிவைப்பர். நம்ம குழைந்தைக்கு நிறைய வைரமும் வைடூரியமுமாய் போடுவர். இதைப்பார்க்கிலும் உனக்கு வேறு நல்லமாப்பிள்ளை கிடைக்கப்போகிறதா? ஏண்டா சந்துரு?

சந்திர:—அம்மா, நீங்களே நம்ம 7 வயசு குழந்தையை இந்த 50 வயசு கிழவருக்கு கல்யாணம் பண்ணிக்கொடுக்கச் சொல்லுகிறேளே? உங்களை கோபிப்பதில் பிரயோஜனமில்லை. எனது வறுமையின் கஷ்டத்தினாலும், வரதக்ஷிணையின் கொடுமையினாலும் நீங்கள் இப்படிச் சொல்லுகிறீர்கள். (சிவராமய்யரைப்பார்த்து) Sir, Mr. Sivarama Aiyar, kindly excuse me. I can't be a party to my daughter's misery. The marriage of my daughter who is 7 years old with you, an old man of 50, is not an equal marriage.

சிவ:—Fifty is not old age! Englishmen think of marriage only at 40!

சந்திர:—But Englishmen do not marry girls of seven!

சிவ:—So you refuse to give your daughter in marriage to me.

சந்திர:—I refuse, sir,

சிவ:—I shall see that you are ruined.

சந்திர:—Don't think I am an illiterate villager on whom your magisterial threats will have effect. I am a distinguished Honours graduate of the Madras University. Clear out of my house, you old fool!

(சிவராமய்யர் சேவகனுடன் கோபத்துடன் போகிறார்.)

ரத்:—என்னடா சந்துரு! நீவட்டி கலெக்டரை என்னன்னமோ இங்கிலீஷில் வசயே! எல்லாம் நேற்றைக்கு வந்த இந்தக் கழுதை கையிலேகப்பட்டு பெரிய மனுஷாளையெல்லாம் பகைத்துக் கொள்ளுகிறாயே!

சகுந்:—(கோபமாய்) என்னம்மா ரொம்ப அதிகத்தனமா பேசரேளே! என்னை நேற்றைக்கு வந்த கழுதைனு எப்படிச் சொல்லுவேள். நானும் ஏதோ மாமியாராயிருக்கேளுனு இத்தனைநாளும் நீங்க என்ன சொன்னாலும் பொறுத்துக்கொண்டு மரியாதையா யிருந்தேன். பொம்பனாட்டி. அதிலும் கம்மனாட்டி உங்களுக்கு இவ்வளவு வாயா? (சந்திரசேகரய்யரைப் பார்த்து) என்ன போங்கோ! உங்க அம்மா என்னை இன்னதுதான் சொல்லரதுனு இல்லையா! அவளென்ன சொன்னாலும் நீங்க சும்மாயிருக்கிறதினால்தான் அவளுக்கு வாய் ஜாஸ்தியாகிறது. என்னை நேற்றைக்கு வந்த கழுதைனு சொல்லரதைக் கேட்டுண்டு சும்மாயிருக்கேளே! பல்லைத் தட்டி கொடுக்கணும்.

சந்திர:—நான் என்னடி செய்வேன்! "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று நமது முன்னோர் சொல்லியிருக்கிறார்கள். நான் எப்படி அம்மாவைக் கண்டிக்கிறது?

சகுந்:—பின்னை நீங்க என்னை உங்க சிநேகிதர்களிடமெல்லாம் better half னு சொல்லரேளே! உங்க better halfஐ உங்க அம்மா insult பண்ணரதைப் பார்த்துக் கொண்டிருக்கேளே! சரி. நம்முடைய தலைவிதி.

(சரோஜினிபாய் வருகிறாள்.)

சந்திர. & சகுந்:—வாருங்கோ!

சரோஜ:—சகுந்தலா, நான் திட்டிவில்லாவுக்கு முந்தாநாள் camp போயிருந்தபோது அங்குள்ள Clubக்கு சாயந்திரம் போயிருந்தேன். அங்கே என்னுடைய சில சிநேகிதர்கள் உங்க பத்மாசினியை டிப்டி கலெக்டர் சிவருமய்யருக்கு கல்யாணம் பண்ணிக் கொடுக்கப் போவதாக பேசிக்கொண்டிருந்தார்கள். எனக்கு ஆச்சிரியமாயிருந்தது. நான் அதை நம்பவேயில்லை. ஏனென்றால் நீங்களும் படித்தவாள், உங்காத்துக்காரரும் படித்தவர். அதினால் எப்படி நீங்கள் அந்த கல்யாணத்திற்கு சம்மதிப்பேளென்று சொன்னேன். அதற்கு அவா சொன்னா—வறுமையின் கொடுமையினால் நீங்கள் கல்யாணத்துக்கு சம்மதங்கொடுப்பீர்களென்றதின்பேரில், நான் உடனே campஐ break பண்ணி இங்கு வந்தேன். இன்னும் நான் சாப்பிடக்கூடவில்லை.

சகுந்:—ரொம்ப thanks. எங்க மாமியர், பந்துக்கள் பத்மாசினி கல்யாணத்தை cheap-ஆய் முடிக்க அந்த கிழட்டு டிப்டி கலெக்டருக்கு ஆசை வார்த்தை காட்டினார்கள். அவர் அதின்பேரில் எங்காத்துக்காரரை தொந்திரவு செய்ததில் அவர் அவரை வீட்டுக்குவந்து கலந்துண்டு போகச்சொன்னார். அதினால் எங்களுக்கு சம்மதம்போலிருக்குன்னு சிவருமய்யர் வெகு குதூகலத்துடன் வந்தார். அவரை இங்க ஆத்துக்கு வரச் சொன்னதுதான் தப்பிதம்.

சந்திர:—Miss Sarojini, thanks very much for your interest. என்னுடைய வறுமையின் கொடுமையால் இதுமாதிரி யோசிக்க நேர்ந்தது. But on second

thoughts I overcame my weakness, gave the old fellow a bit of my mind, and asked him to clear out of my house.

சரோ:—வறுமையின் கொடுமையாவது? உங்களுக்கென்ன சாப்பாட்டுக்கில்லையா?

சந்திர:—நமது ஜாதி வழக்கத்தின்படி நம்ம குழந்தைக்கு கல்யாணம் பண்ணணும். அதற்கு மாப்பிள்ளைக்கு கொடுக்க வரதக்ஷிணை வேண்டும். அதற்கு என்னிடம் பணம் கிடையாது. அதினாலேதான் ஏதோ ஒரு weak moment-ல் சிவருமய்யரைப்பற்றி சிறிது யோசிக்க வேண்டி வந்தது.

சகுந்:—ஜாதிவழக்கமாவது? ஜாதிவழக்கம் நல்லதாயிருந்தால் அனுசரிக்கவேண்டியதுதான். கெட்ட வழக்கமாயிருந்தால் அதை அறவே ஒழிக்கவேண்டும். இந்த வரதக்ஷிணையாகிய கொடிய வழக்கம் ஒழிந்தாலொழிய நம்முடைய நாடு முன்னேற்றமடையாது. எத்தனை பெண்கள் தங்களுடைய தாய் தகப்பன்மார் வரதக்ஷிணை கொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து மனம் பரதவித்து, அதற்கு காரணம் தாங்கள் தானென்று மனம் நொந்து தங்களை தாங்களே மாய்த்துக் கொள்ளுகிறார்கள்! இந்த வரதக்ஷிணையினாலல்லவோ நமது நாட்டு ஆடவரும் பெண்டிரும், பிள்ளை பிறந்தால் சந்தோஷப்படுகிறார்கள், பெண் பிறந்தால் மனசஞ்சலமடைகிறார்கள். வரதக்ஷிணையினாலல்லவோ இந்த மாதிரி 7 வயசு பெண்ணுக்கும் 50 வயசு கிழவனுக்கும் கல்யாணஞ் செய்வதற்கு பெண்ணின் தாய் தகப்பன்மார்களே உட்படுகிறார்கள்! அதினாலல்லவோ Miss Mayo போன்ற அன்னிய நாட்டு கிரந்தகர்த்தாக்கள் நமது

நாட்டைப்பற்றி கேவலமாக எழுதுகிறார்கள். இந்தப் பரிசப்பண வழக்கம் நமது நாட்டிலிருக்குமட்டும் நம்மை உலகத்தார் பரிகசிக்கத்தான் செய்வார்கள்!

சரோ:—சகுந்தலா, நம்ம Women's Association auspices-ல் வரதக்ஷிணையைப்பற்றி உங்களை ஒரு உபந்நியாசஞ் செய்யச் சொல்லலாம் போலிருக்கே! I am glad you have not merely definite ideas of social reform but you have the courage to carry them out. Mr. Chandrasekhara Aiyar, I am glad that, thanks to your cultured wife, you have finally decided not to give your daughter to that old fool.

சந்திர:—All's well that ends well. Had it not been for my cultured wife, I would very probably have yielded to the pressure of my mother, relatives and the Deputy Collector.

(தந்தி ஆபீஸ் வேலைக்காரன் தந்தி கொண்டுவந்து கொடுக்கிறான்.)

சந்திர:— (தந்தியைப் பார்த்து சந்தோஷப்பட்டு வாசிக்கிறார்.)

"Appointed Sub Editor of the 'Swarajya' on 200—10—300. Join duty forthwith"

சரி, ஏதோ ஈசுவர் கிருபையால் நல்ல வேலை கிடைத்திருக்கிறது.

சகுந்:—'Swarajya' Paper Sub-Editor ஆகவா. 'Swarajya' National paper ஏ! நீங்க Sub-Editor ஆயிருக்கேளென்று எங்கப்பா pension ஐ நிறுத்திவிடப்போரா!

சந்திர:— Oh no, மாப்பிள்ளை தேசியப் பத்திரிகை Sub-Editor ஆ மாமனார் pension ஐ நிறுத்திவிடுவார்களா? The Government is not so foolish.!

சரோ:—நீங்களோ இனிமேல் Madras ல் தானிருக்கணும். அங்கேயோ படிப்புக்கு நல்ல facilities இருக்கு. Give Padmasini good education. Don't think of her marriage. If she chooses to marry after her collegiate career, let her do so.

சந்திர:—That is my idea too. சரி இன்னும் 4, 5 நாளில் பட்டணம் போகணும்.

சகுந்:—சரோஜினி, நாங்கள் Madras க்குப் போனால் உங்க company இல்லாமல் போகுமேனு வருத்தமாயிருக்கு.

சரோ:—எனக்கும் நீங்கள் இந்த ஊரைவிட்டுப் போனபிற்பாடு, life dull ஆகவிருக்கும். I shall work for a transfer to Madras.

ரத்:—எல்லா இங்கிலீஷ்காரிகளுஞ் சேர்ந்து நம்ம பத்மாசினியை இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் சேர்க்கிறதற்குதானு இத்தனை நாழி என்னமோ இங்கிலீஷிலும் தமிழிலும் ஈரங்கி பண்ணினேள்.! காலம் கலிகாலம்! நானும் என்னசெய்யரது.!

சகுந்:— உங்கமாதிரி அநேக மாமியார்களிருப்பதினால்தான் காலம் கலிகாலமாயிருக்கு. நீங்க படக்குனு போனால் தான் எங்களுக்கு க்ஷேமம்.

(ரத்னம்மாள் கோபத்துடன் போகிறாள். மற்றவர்கள் போகிறார்கள்.)

மூன்றாவது அங்கம்

Scene I

A well furnished room in Miss Sarojini's house

Miss Sarojini is reading a book. Enter Harinarayanan

Saro:—என்னடா Hari? When do you propose to take charge?

Hari:—I have been posted to the Rajahmundry College and that means I have got a week's joining time.

Saro:—But I hear that the Retrenchment Committee have decided to close down that college.

Hari:—What does it matter to me? If the college at Rajahmundry is closed, the Government will find me a place in the Presidency College. By the bye, who is that girl whom I saw with you at the Cosmopolitan Club a fortnight back?

Saro:—Oh! She is Padmasini who has taken a first place in the first class in the B. A. (Honours) Philosophy Examination. She is the daughter of my friend, Mr. Chandresekhara Aiyer.

Hari:—You mean that Chandresekhara Aiyer who is the Editor of the 'Swarajya'

Saro:—Yes, the same person. 12 years ago he took the first place in the History Honours Examination and competed for the I. C. S. but was declared unfit by the Medical Board. He then tried for several appointments, went from pillar to post, and finally secured the Sub-Editorship of the 'Swarajya.' He is now its Editor. Nearly twelve years ago owing to the pressure of his relatives he thought of marrying his daughter who was then 7 years to an old Deputy Collector who is now dead. But thanks to the influence of his cultured wife, he gave up the idea and put the girl to school. The girl passed all her examinations with great credit to herself, to her cultured parents and to her community.

Hari:—Is the girl married!

Saro:—Not yet!

Hari:—Is she likely to marry?

Saro:—I don't know. You may ask her yourself. She will be coming now.

Hari:—You mean *here*.

Saro:—Yes. She applied for a post in the Educational Department and she has been posted to the Kindergarten Department of the Teachers' College, Rajahmundry. She sent word to say that she would go here now to take leave of me.

Hari:—(*Aside*) What a strange concidence! I to Arts college and she to Teachers' College, Rajahmundry.

Saro:—I hear somebody getting upstairs. I think it is she.

Hari:—(*making an attempt to go*) I shall go.

Saro:—Do remain. I shall introduce you to her. (*Enter Padmasini with a Tennis bat*)

Good evening! Padma!

(*Padmasini sees Harinarayanan and is pleasantly surprised*)

Pad:—Good evening! (*in an excited tone*).

Saro:—You seem to be excited. Probably you have come after a Tennis Match.

Pad:—Yes. After a match and that after a victorious match!

Saro:—(*Aside*) I wish this match also ends in success! This is my brother Harinarayanan, M. A. (Mad.) M. Sc. (Lon.) and this is Padmasini B. A. Hons.

daugther of my friends Chandrasekhara Aiyar and Sakuntala. (*Introduces them.*)

Pad:—(*To Saro*) Yes, you have told me, about him. (*To Hari*) When did you return from England?

Hari:—A month ago! I then ran up to Ooty to see the Minister for Education and the Director of Public Instruction and returned to this place only a fortnight back.

Pad:—Were you successful in your efforts?

Hari:—Yes. I got an order yesterday.

Pad:—A Brahmin successful in getting an appointment!

Hari:—But I am an England returned Brahmin!

Pad:—Oh! I see! Where have you been posted?

Hari:—To Rajahmundry Arts College.

Pad:—(*Aside*) What a strange concidence!

You will be glad to know that I have been posted to the same place, but to the Teachers' College.

Hari:—So we will have several opportunities of meeting each other.

Saro:—Why do you say '*several*'? You can see that that you *always* meet each other and that your association is inseparable.

Pad and Hari:—(*agreeably surprised*) We don't understand you!

Saro:—Understand me! You think I have not followed your glances. Love is blind but I am not blind. (*Hari. and Pad. hang their heads.*)

Why make a secret of your love? (*To Padma*). I shall inform your father and mother about this. They will certainly give their consent. I will then arrange the betrothal before both of you leave for Rajahmundry and then after some time we shall celebrate the marriage. (*Hari and Padma see each other and smile. All go.*)

காட்சி 2

சந்திரசேகரய்யர் வீட்டில் ஓர் அறை

(*சந்திரசேகரய்யர் எழுதிக்கொண்டிருக்கிறார். சகுந்தலா வருகிறாள்.*)

சகுந்:—*உங்களைத்தானே!*

சந்திர:—*என்னடி! என்ன சமாசாரம்?*

சகுந்:—*ஒரு நல்ல சமாசாரம். நம்ம பத்மாசினிக்கு ஹரி நாராயணனைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு அபிப்பிராயமிருக்காப் போலிருக்கு.*

சந்திர:—*உனக்கு யார் சொன்னா?*

சகுந்:—*சரோஜினி சொன்னாள். பத்மாசினி ஹரிநாராயணனை சரோஜனி வீட்டில் பார்த்தாளாம்.*

சந்திர:—*அப்புறம்!*

சகுந்:—*அப்புறம் அவ்வளவுதான். கல்யாணம் பண்ணிக்க சம்மதித்தாளாம்.*

சந்திர:—*ஏது!* Love at first sight and marriage at the next thought—*ஆ?*

சகுந்:—*அவளுக்குக் கல்யாணம் பண்ணிக்கப் பிரியம்னு சொல்லரபோது நாம் தடைசொல்வானேன்!*

சந்திர:—நான் தடை சொல்லவில்லையே. நான்தான் 12 வருஷத்திற்கு முன்னாலே சொன்னேனே. "She may choose her own partner in life".

(சரோஜினியும், ஹரிநாராயணனும் வருகிறார்கள்.)

சரோ:—சந்திரசேகரய்யர், இதுவரையிலும் நான் உங்க wife's friend ஆயிருந்தேன், இனிமேல் உங்க சம்மந்தி.

சந்திர:—என் wife இப்பத்தான் இந்த சமாசாரத்தை சொல்லிக்கொண்டிருந்தாள். நீங்களும் வந்துட்டேள். நம்ம பத்மாவைக் கூப்பிட்டுக் கேட்போம்.— பத்மா! பத்மா!

(பத்மாசினி வருகிறாள் ஹரிநாராயணனைப் பார்த்ததும் வெட்கி புன்னகையுடன் நிற்கிறாள்.)

ஏண்டி, பத்மா, உனக்கு ஹரிநாராயணனைக் கல்யாணம் பண்ணிக்கொள்வதற்கு சம்மதந்தானே?.

(பத்மா பதில்பேசாமல் புன்னகையுடன் தலைகுனிந்துகொண்டிருக்கிறாள்.)

என்ன பதில்காணோம்?

ஹரி:— Silence means consent.

சந்திர:— உன்னைக் கேட்கவில்லை. Of course you are anxious to marry her. என்ன பத்மா! நீ என்ன சொல்றே?

பத்:—சரோஜினி சொன்னாளே அப்படித்தான்.

சகுந்:—அப்படித்தானா? அதை விஸ்தாரமாய்ச் சொல்லேன்.

பத்:—என்னம்மா என்னைக் கேலிபண்றேள்.

சகுந்:—கல்யாணம்னா பத்துபேர் பத்துமாதிரி பரிகாசஞ் செய்வா. என்ன அப்புறஞ் சொல்லு.

சந்திர—என்ன பத்மா! பிகு பண்ணிக்காதே!

பத்:—(தலைகுனிந்தவண்ணம்) நான் அவாளைத்தான் கல்யாணஞ்செய்துகொள்வேன்.

சந்திர:—அவாள்னு யாரு? பேரைச் சொல்லேன்.

சகுந்:—நீங்களென்ன கன்னாருக்கு! அவள் அவர் பேரைச் சொல்லுவாளா.!

சந்திர:—அவருக்கு கடிதம் எழுதினா பேரை எழுதமாட்டாளா!

பத்:—எழுதுகிற மாதிரி வேறு. சொல்லுகிற மாதிரி வேறு.

சந் & சகுந்:—சரி. யாரை கல்யாணஞ் செய்துகொள்ளப் பிரியப்படுகிறாயோ அவர் பேரை எழுது பார்ப்போம்.

சரோ:— Name with qualifications and designation.

(பத்மா ஹரிநாராயணன் பெயரை எழுதிக்காட்டுகிறாள்.)

சந்:—சரி. அப்பா ஹரி. நீ என்ன சொல்லுறே!

ஹரி:— Of course. If I marry, I shall marry only your lovely daughter.

Y15:41 N32

சந்:—சரி எனக்கு சர்வ சம்மதம்.

சரோ & சகுந்:—எங்களுக்குமப்படியே.

சந்:—ரொம்ப சந்தோஷம். வருகிற தைமாசம் கல்யாணஞ் செய்துவிடுவோம்.

மங்களம்.

முற்றிற்று.

59205

The Palamcottah Printing Press.—1932.

For copies apply to

M. V. SUBRAHMANYAM, M. A., L. T.,

Lecturer in History, St. John's College,

Palamcottah.

வரதக்ஷிணையின் கொடுமையும் கல்வியின் திறமையும்

The Tyranny of the Dowry System and the Triumph of Culture

வரதக்ஷிணையின் கொடுமையும் கல்வியின் திறமையும்

The Tyranny of the Dowry System and the Triumph of Culture

Dramatis Personae

Dinadayalu Mudaliar ...	PRESIDENT OF THE MADRAS CORPORATION
Bertrand Shaw, I. C. S. ...	COMMISSIONER OF CORPORATION
Sankaran Pillai ...	CLERK OF THE CORPORATION
Chandresekhara Aiyar B. A (Hons) ...	EDITOR OF THE 'SWARAJYA'
Sakuntala ...	CHANDRESEKHARA AIYAR'S WIFE
Padmasini ...	CHANDRESEKHARA AIYAR'S DAUGHTER
Ratnammal ...	WIDOWED MOTHER OF CHANDRESEKHARA AIYAR
Sivaprasad ...	FRIEND OF CHANDRESEKHARA AIYAR
Sivarama Aiyar, B. A. ...	A FIFTY YEAR OLD DEPUTY COLLECTOR — A WIDOWER
Miss Sarojini, M A., L.T., ...	INSPECTRESS OF SCHOOLS
Harinarayanan, M.A., (Madras) MSc. (London) ...	BROTHER OF SAROJINI AND LOVER OF PADMASINI

Kudu kudupandi (fortune teller) **and servant of the Deputy Collector**

(The characters in the farce are entirely imaginary and no reference living persons is intended).

வரதக்ஷிணையின் கொடுமையும் கல்வியின் திறமையும்

The Tyranny of the Dowry System and the Triumph of Culture

முதலாவது அங்கம்

காட்சி 1

சந்திரசேகரய்யரின் வீட்டில் ஓர் அறை

(சந்திரசேகரய்யரும் சகுந்தலாவும் பத்மாசினியுடன் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்.)

சந்திரசேகரய்யர்:— குழந்தை யென்ன இளைச்சிருக்காளே. ஏதாவது உடம்பு சரியில்லாமலிருந்ததா?

சகுந்தலா:—உடம்பு எல்லாம் சரியாய்த்தானிருந்தாள். நீங்கள் இந்த Hons Class கடைசி வருஷமென்று கிட்ட மட்ட ஒரு வருஷமாக ஊருக்கே வரவில்லையே. குழந்தை அப்பாவை பார்க்காமல் ஏங்கிப்போனாள். அதுதான் இளைச்சிருக்காள்.

சந்திர:—என்டி குட்டி? நீ அப்பாவை ஒரு வருஷமாக காணலைனு ஏங்கியிருந்தாயா?

பத்மாசினி:—என்னப்பா? ஒரு வருஷமா யிங்கே வரவேயில்லை! நான் அம்மாகிட்டே 'நீங்க எப்ப வருவேன்' என்று அடிக்கடி கேட்டுண்டேயிருந்தேன்.

சந்திர:—நீ என்ன ஜவாபு நம்ம குட்டிக்குச் சொன்னே.

சகுந்:—"எல்லாம் வருவா, வருவா"ன்னு ஏமாற்றிண்டே வந்தேன். ஆமா. நீங்கள் நம்ம குழந்தைக்கு பட்டணத்திலிருந்து என்ன வாங்கிண்டு வந்தேள்?

சந்திர:—விளையாட பொம்மை, படிக்க புஸ்தகம், திங்க பிஸ்கோத்து எல்லாம் வாங்கி வந்திருக்கேன்.

சகுந்:—எனக்கு Karachi Silk புடவை வாங்கிண்டு வந்திருக்கேளா?

சந்திர:—உனக்கு வேண்டிய புடவை வாங்கிருக்கேன்.

பத்மா:—எங்கே அப்பா பிஸ்கோத்து, பொம்மையெல்லாம்?

சந்திர:—இன்னிக்கு காலம்பரதானே பட்டணத்திலிருந்து ரயிலில் வந்தேன். பொட்டியிலிருக்கு. இப்ப எடுத்து தரேன்.

(கதவை தட்டுகிற சப்தம் கேட்கிறது.)

யாருன்னு பார்த்துட்டு வா.

(சகுந்தலா போய்வருகிறாள்.)

சகுந்:—உங்க சிநேகிதர் சிவப்பிரசாத் வந்திருக்கிறார். பத்மா நம்ப உள்ளே போவோம் வா.

(சகுந்தலாவும், பத்மாமணியும் போகிறார்கள். சிவப்பிரசாத் வருகிறான்.)

சந்திர:—அடடே! நீயா! வாடா. எப்படா Trichy இலிருந்து வந்தே?

சிவபிரசாத்:— நேற்று காலம்பர வந்தேன்! நீ எப்ப Madras இலிருந்து வந்தே? How have you done in the History Honours Examination?

சந்திர:—Most splendidly. I expect a first class. What about you? How have you done in the Intermediate Examination?

சிவ:—I have done very well. I expect a first class. By the bye, Honours Course-ல் Professors தயவு ரொம்ப வேணும். ஆனால் நீ ஏதோ உங்க Professor இடம் misbehave பண்ணினையென்று கேள்விப்பட்டேனே. What is that?

சந்திர:—ஒன்றுமில்லே. எங்க Professor-ஐ கொஞ்சம் கேலி பண்ணினேன். But he took it in good spirit. என்னன்னா — எங்க Professor Indian தான். ஆனால் completely anglicised. Anglicised-ன்னா hat, boot போடறது மாத்திரமில்லே. அது இந்தக் காலத்திலே எல்லாருந்தான் போட்டுக்கொள்ளுகிறார்களே. அவர் என்னன்னா — தன்னை எல்லாரும் Englishman-ன்னு நினைத்துக்கொள்ளவேண்டுமென்று இங்கிலீஷிலே எப்பவும் பேசுவார். தமிழ்பேசினாக்கூட அதிலே English accent போட்டுப் பேசுவார். அவர் ஒரு நாளைக்கு என்னை class-ல் ஒரு கேள்வி கேட்டார். அதற்கு நான் பதில் சொல்லும்போது "My suggestion is" (ஸஜ்ஜஷன்) ன்னு ஆரம்பித்தேன். நான் 'suggestion' வார்த்தை pronounce பண்ணினது சரியில்லையென்று சொல்லவேண்டியதுதானே. அவர் என்ன சொன்னாரென்றால் "We in England pronounce the word as 'suggestion'." (ஸஜ்ஜஸ்டியன்) எனக்கு கோபம் வந்தது. இவர் Madras-க்கு வடக்கே போகாதவர். அவரை snub பண்ணணுமென்று நான் சொன்னேன், "Oh! We in America pronounce the word only as 'suggestion'" (ஸஜ்ஜஷன்) பையன்களெல்லாம் கொல்லு சிரிச்சுட்டான்கள். நீதான் சொல்லேன். இவர் "We in England"ன்னு

நான் "We in America"னு சொல்லப்படாதாக்கும். He is as much an Englishman as I am an American. அதுமுதற்கொண்டு நம்மைக்கண்டால் சிம்ம சொப்பனம். இந்த incident தான். வேறு நான் ஒன்றும் misbehave பண்ணவில்லை.

சிவ:—That is good. (மேஜையின்மீது ஒரு ஓடாத கடியாரத்தைப் பார்க்கிறான்.) என்னடா? இந்த time piece ஓடல்லை.

சந்திர:—It has a history behind it. இந்த time pieceஐ Calcutta Good Luck Company advertise பண்ணியிருந்தான். Advertisement ran thus "Money returned if not satisfactory". நான் நினைத்தேன் money தான் return பண்ணிவிடுவானே if the time piece is not satisfactoryனு ஒரு time pieceக்கு order பண்ணினேன். V. P. P.ல் வந்தது. வந்து 7 நாள் ஓடிற்று. அப்புறம் ஓடவில்லை. நான் உடனே பணத்தை திருப்பியனுப்பும்படிக்கு Companyக்கு எழுதினேன். I got this reply from the company "Your money is satisfactory and so we do not want to return it." (வெபிரசாத் சிரிக்கிறான்.) எனக்கு அவமானமாய்ப் போச்சு. So I threw good money after a bad time piece.

சிவ:—Company Good Luck Company தான். உனக்குத் தான் bad luck. இந்த advertisement எல்லாம் முழு ஏமாற்றல். நல்ல சரக்குக்கு advertisement வேண்டாம். பிலாப்பழத்துக்கு ஈ பிடிக்க விடணுமா!

(குடுகுடுப்பாண்டி வருகிறான்.)

(வெப்பிரசாதைப் பார்த்து)

குடுகுடுப்:—மலையாள பகவதி, திரிபுவனேஸ்வரி, ஜூன்டம்கேசி, (குடுகுடுப்) ஐயருக்கு தொப்பை பெருகுது. பரீக்ஷையில் முதல் கிளாஸ் பாஸ்பண்ணப் போகுது. போகுது, போகுது. (குடுகுடுப்)

(சகுந்தலாவும் பத்மாசினியும் குடுகுடுப்பாண்டியைப் பார்க்க வருகிறார்கள்.)

சந்திர:—ஏ, குடுகுடுப், என்னடா, அவரைப் பார்த்து குறி சொல்லறே. அவர் ஆள் மோட்டாவாயிருக்காருன்னு. அவர் எனக்கு வயசுக்கு சின்னவரடா. எனக்குச் சொல் பார்ப்போம்.

குடுகுடுப்:—மலையாள பகவதி, திரிலோக மாதா, பத்திரகாளியம்மா (குடுகுடுப்) உங்களுக்கு முதல் கிளாஸில் பரீக்ஷை பாஸாகப்போகுது. உங்க குழந்தைக்கு ஒரு பெரிய ஆபத்து சமீபத்தில் வரப்போகுது. ஆனால் மஹமாயி கிருபையிலே ஓடிப்போவப் போகுது. நான் சொல்லுவதெல்லாம் வாஸ்தவங்க. (குடுகுடுப்)

சந்திர:—சரி, உனக்கு என்னடா வேணும்?

குடுகுடுப்:—ஒரு படி அரிசியும், நீங்கள் போட்டு கிழிந்த சட்டையும் கொடுங்க.

சந்திர:—அடியே, அவனுக்கு அரிசியும், கிழிஞ்ச சட்டையும் கொடுத்தனுப்பு. நமக்கு First Class வரதானு பார்ப்போம்.

(எல்லாரும் போகிறார்கள்.)

காட்சி 2

சந்திரசேகரய்யரின் வீட்டில் ஓர் அறை

(சந்திரசேகரய்யர் Galsworthy's 'Forsythe Saga' என்னும் நாவலைப் படித்துக்கொண்டிருக்கிறார். உள்ளே Book Shelf விழுகிற சப்தம் கேட்கிறது.)

சந்திர:—யாரது? Shelf-லுள்ள Books-ஐயெல்லாம் தள்ளி விடரது?

(சகுந்தலா Goldsmith's 'Vicar of Wakefield' ஐ வைத்துக் கொண்டுவருகிறாள்.)

சகுந்:—இல்லை நான்தான். Goldsmith's 'Vicar of Wakefield' ஐ வாசிக்கலாமுன்னுட்டுத் தேடினேன். அது உங்க History books பக்கத்திலிருந்தது. அதை எடுக்கிற போது உங்க புஸ்தகங்களெல்லாம் விழுந்துவிட்டது. அதுதான் சப்தம். விழப்பண்ணினதற்காக என்மேலே கோபமோ!

சந்திர:—சரியாய்ப் போச்சு. நான் உன்மேலே கோபிச்சுப் பேனு! நீ வேணுமுனு செய்தாய். ஏதோ கைதவறி விழுந்துடுத்தாக்கும். சரி அதெல்லா மிருக்கட்டும். உனக்கு 'Vicar of Wakefield' வாசிக்கிறதற்கு அவ்வளவு English Knowledge இருக்கா? நான் IV Form வாசிக்கிறபோது நம்பளுக்குக் கல்யாணமாச்சு. அதா வது கிட்டத்தட்ட பத்து வருஷத்திற்குமுன்னால். அப் போது உனக்கு இங்கிலீஷே தெரியாது. அப்புறம் உங்கப்பா சொல்லிக்கொடுத்து உனக்கு English Readers எல்லாம் வாசிக்கத் தெரிந்தது. நம்ம குழந் தை பத்மாசினி பிறந்தபோது, அதாவது ஆறு வருஷத்

திற்கு முன்னால் உனக்கு 'Books for the Bairns' வாசிக்க சக்தி யிருந்தது. ஏது இப்பத் தேவலையே! Classical novels எல்லாம் படிக்கிறயே!

சகுந்:—இப்பத்தான் ஒரு வருஷமாய் ரொம்ப English books வாசித்து improvement. எங்க அப்பாவினு டைய ஸ்நேகிதர் கிருஷ்ணய்யரின் பெண் சரோஜினி எம். ஏ., எல். டி., பாஸ் பண்ணிவிட்டு இந்த ஊரில் Inspectress of Schools ஆயிருக்காள். அவள் இந்த ஒரு வருஷமாய் எனக்கு நன்றாய் இங்கிலீஷ் சொல்லிக் கொடுத்ததினால் ஏதோ கொஞ்சம் improvement ஏற் பட்டிருக்கிறது.

சந்திர:—எனக்கு Final Year Course ஆயிருந்தபடியால் நான் லீவுக்குக்கூட ஊருக்கு வராமல் பட்டணத்திலே யே ஒரு வருஷமாய் படித்துக்கொண்டிருந்தேன். அதி னால்தான் உன்னுடைய progress in English எனக் குத் தெரியாமல் போச்சு. உனக்கு நல்ல Knowledge இருக்கிறதற்கு நீ எனக்கு Englishல் லெட்டர்கள் எழுதியிருக்கலாமே.

சகுந்:—எனக்குத்தான் இங்கிலீஷ் தெரியுமென்று உடனே உங்களுக்கு பிரமாதமாக ஒரு Essay எழுதி விடர தாக்கும். நீங்களாக தெரிஞ்சக்கட்டுமேனு தமிழில் எழுதினேன். அதிருக்கட்டும், உங்கள் கையில் என்ன புஸ்தகம்?

சந்திர:—'Forsythe Saga' என்னுமொரு நாவல்.

சகுந்:—John Galsworthy னுடைய நாவல்தானே.

சந்திர:—(ஆச்சரியப்பட்டு) அடடா! author சொல்லரையே! இந்தப் புஸ்தகம் நீ வாசித்திருக்காயா?

சகுந்:—இல்லை. நம்ம சரோஜினி Galsworthy's novelsஐ எல்லாம் வாசித்து கதைகளை simple Englishல் எனக்கு அடிக்கடிச் சொல்லியிருக்கிறாள்.

(தந்தி ஆபீஸ் வேலைக்காரன் சைக்கிள் மணியை யடிக்கிறான். 'சாமி' 'சாமி' என்று கூவுகிறான். சந்திரசேகரய்யர் வெளியே போய் தந்தியை வாங்கிப் பார்த்து குதூகலமாய் வருகிறார்.)

சகுந்:—ஏது ரொம்ப சந்தோஷமாயிருக்காப் போலிருக்கு? என்ன சமாச்சாரம்?

சந்திர:—எங்க History Honours பரீக்ஷை result வந்திருக்கு. நான் First classல் பாஸ் பண்ணியிருக்கிறேனென்று தந்தி வந்திருக்கு.

சகுந்:—ரொம்ப சந்தோஷம். சந்தோஷசமாசாரம் கொண்டு வந்த தந்தி peon-க்கு ஏதாவது அரைரூபாய் present கொடுங்கோ.

சந்திர:—அரை ரூபாய்க்கு ஒரு ரூபாயா கொடுக்கிறேன். (ஒரு ரூபாய் எடுத்து வெளியில்போய்க் கொடுத்துவிட்டு திரும்புகிறார்).

சகுந்:—இன்னிக்கு Madrasல் result போட்டிருக்கிறதினாலே நாளை சாயந்திரம் பேப்பரில் உங்க result வந்துவிடும். அதில் History Honours-ல் ஒரேஒரு First class இருந்தால் நீங்க First in the Presidency தானே?

சந்திர:—அநேகமா என்னுடைய ஒரு First class தானிருக்கும். தவிர நம்முடைய academic career brilliant ஆய்போச்சு. School Final ல் எல்லா subjects லேயும் 80% க்கு மேலே; Intermediateல் First class with distinction in all subjects; Honoursல் First class, probably first in the Presidency.

சகுந்:— எல்லாம் என் அதிர்ஷ்டந்தான் !

சந்திர:—நான் சிரமப்பட்டு படித்து பாஸ்பண்ணாதாக்கும். அது உன்னுடைய அதிர்ஷ்டமாக்கும்!

சகுந்:—சரி. இரண்டுபேருடைய அதிர்ஷ்டமுனு வச்சுப் போமே!

சந்திர:—அதெல்லாமிருக்கட்டும். இனிமேல் நடக்கவேண்டியதை யோசிப்போம். I.C.S. Competitive examination க்குப் போய் பாஸ்பண்ணினால், England க்கு Training க்காக ஒரு வருஷம் அனுப்புவா. அப்புறம் Sub Collector ஆக வந்துவிடலாம்.

சகுந்:—நீங்கள் I. C. S. க்கு compete பண்ணக்கூடாது. பரீக்ஷையில் நிச்சயமாய் பாஸ்பண்ணிவிடுவேள். அப்புறம் சீமைக்கு ஒருவருஷம் போயிருக்கணுமே; அதுக்குப் போகப்படாது.

சந்திர:—உன்னுடைய ஆக்ஷேபணையின் நுட்பம் எனக்குத் தெரிந்தது. உனக்கு என்ன பயம்னா — எங்கே நான் I. C. S.ல்பாஸ்பண்ணி சீமைக்குப்போனா வருகிறபோது ஒரு வெள்ளைக்காரச்சியைக் கல்யாணம் பண்ணிண்டு வருவேனோனு சந்தேகம். அப்படியொன்றும் சந்தேகப் படவேண்டாம். என்னை மற்றவா மாதிரி நினைச்சுடாதே!

சகுந்:—நான் அப்படியொன்றும் நினைக்கவில்லை. இத்தனை வருஷந்தான் படிச்சாச்சே. இன்னும் என்ன படிப்பு. I. C. S. பாஸ்பண்ணி நீங்க சீமைக்குப் போனா, நானும், குழந்தை பத்மாஸினியும் தனியானா இருக்கணும். அதிலும் உங்கம்மா என்னை பிடுங்கி எடுத்துடுவள்.

சந்திர:— அதற்கு நான் ஒருவழி சொல்லுகிறேன் கேள். உங்கப்பா தாசில்தார் வேலையிலிருந்து retire ஆகி இப்ப

தானே pension வாங்க ஆரம்பிச்சிருக்கிறார். அவருடன் ஒரு வருஷமிருக்கிறது. நான் அதற்குள்ளே சீமையிலிருந்து Sub-Collector ஆக வந்துவிடுவேன். அப்புறம் நம்ம life ரொம்ப happy ஆகவிருக்கும்.

சகுந்:— I. C. S. ஒருவேளை பாஸ்பண்ணலேன்னா என்ன வேலைக்குப் போவதாக உத்தேசம்?

சந்திர:— I. C. S. இல்லேன்னா College Professor ஆகத்தான் போகவேணும்.

சகுந்:— எனக்கு அது இஷ்டமேயில்லே. வாத்தியார் வேலையை எல்லாரும் இளப்பமா சொல்லராளே! B. A. class, M.A. class க்கு சொல்லிக்கொடுக்கிற Professor ஐ கூட டறுனு சொல்லரா! என்னை டறு ஆம்படையாள்னு சொன்னாக்க எனக்கு எவ்வளவு இளப்பமாயிருக்கும்!

சந்திர:- பின்ன என்ன வேலைக்கு போகணுங்கிறாய்?

சகுந்:— Revenue Inspector ஆக போகிறது தானே! எங்க அப்பா B. A. பாஸ்பண்ணிவிட்டு Collector ஆபிஸில் குமாஸ்தாவாகப்போனார். அவர் படிப்படியாய் உத்தியோகத்தில் உசர்ந்து தாசில்தார்வேலை பார்த்து பென்ஷன் வாங்கவில்லையா. சர்க்கார்வேலைன்னா அதற்கு மவுசு வேறேதான். நீங்க வாத்தியாராப்போனா வேலைக்காரன் வேணும்னு நீங்கள் சம்பளம் கொடுத்து வைக்கணும். Revenue Inspector னா எத்தனையோ பேர் கைகட்டிண்டு நிற்பா.

சந்திர:— வாத்தியார்னா பள்ளிக்கூடத்துப் பையன்கள் சொன்னபடி கேட்பார்கள்.

சகுந்:— அது பண்டைக்காலம். இந்தக்காலத்தில் பையன்கள், வாத்தியார் சொன்னபடி கேட்கிறதாவது. சும்மா விட்டா போதாதா. கிளாஸில் வேணும்னு பையன்கள் தீராப்பொறிவேனு மரியாதை பண்ணுவார்கள். ஒரு வாத்தியாரிடம் படித்த பையன்கள் மேல் கிளாஸுக்கு போனா, அந்த வாத்தியாரை சின்ன கிளாஸ் வாத்தியார்னு சொல்லிவிடுகிறார்கள். போயும் போயும் இந்தப் போக்கத்த Professor வேலைக்கு போகவேண்டாம். Revenue Inspector வேலைக்கு போங்கோ.

சந்திர:— அதெல்லாம் முடியாது. I. C. S-க்கு பிரயத்தனஞ் செய்து அதில் தவறினால்தான் மற்ற யோஜனையெல்லாம்.

சகுந்:— சரி. நீங்கள் அப்படி பிடிவாதம் பிடிக்கிறபோது நான் என்ன சொல்லரது!

(போகிறார்கள்.)

காட்சி 3

மிஸ். சரோஜினி வீட்டில் ஓர் அறை

(மிஸ். சரோஜினி கிராமபோனில் K. B. சுந்தராம்பாள் record ஒன்றை கேட்டுக்கொண்டிருக்கிறாள். சகுந்தலா வருகிறாள்.)

சரோஜினி:— வாருங்கோ. உட்காருங்கோ.

சகுந்:— ஏது சாவகாசமாயிருக்காப்போலிருக்கு?

சரோ:— நேற்றுதான் Half-yearly returns எல்லாம் Director office-க்கு அனுப்பினேன். அதினாலே இப்ப கொஞ்சம் leisure கிடைத்தது. Sundarambal's latest record-ஐ கேட்போமென்று வச்சேன். நீங்க

ளும் வந்தேன். — அதிருக்கட்டும். நான் உங்களை congratulate பண்ணனும். It is long overdue. ஆனால் நான் உங்களை ரொம்ப நாளாய் பார்க்கல்லே.

சகுந்:—எதற்காக?

சரோ:—On your husband's success in the History Honours Examination. நீங்கள் உங்க husband's number-ஐ கொடுத்திருந்தேள். நான் 17th May புதுபாண்டியில் camp இருக்கிறபோது paper-ல் result publish பண்ணியிருந்தது. I was very glad to find your husband's number in the first class. Being the only first class he is first in the Presidency. It is a great achievement especially when he had a set of incompetent professors. அவருடைய professors-க்கு note-books-ஐ உள்ளதைத் தவிர வேறொன்றும் தெரியாது. Lecture பண்ணுகிறதற்கு சொல்வன்மை போறாது. தங்களுடைய periods-ல் notes dictate பண்ணுவார்கள். அந்த notes கூட அவர்கள் தயார்பண்ணினதோ, அல்லது வேறு யாராவது print பண்ணினதை இவர்கள் தாங்கள் prepare பண்ணின மாதிரி பையன்கள் நினைத்துக்கொள்ளட்டுமென்று தங்கள் note books-ல் copy பண்ணினார்களோ! அந்த notes-ஐ students எடுத்துக்கொள்ளணும். பையன்கள் அதைப்படித்து His Master's Voice, His Master's Faults எல்லாவற்றையும் Examination paper-ல் எழுதணும். இதுதான் teaching in your husband's college. இப்பேர்க்கொத்த incompetent professorsகிட்டப்படித்து first classபாஸ்பண்ணினது ரொம்ப creditable.

சகுந்:—ஏதோ பெரியவாள் ஆசீர்வாதந்தான். ஆனால் இவ்வளவு உசத்தியாய் பாஸ்பண்ணினதிலே ஒரு சங்கடம் என்னன்னா, நான் எவ்வளவோ சொல்லியும் கேட்காது, I. C. S. பைத்தியம் பிடித்து, பரிக்ஷைக்குப் போகப் போறாளாம். அதற்காக Madras-க்கு Medical Board Examination-க்கு போய் ஒரு வாரமாகிறது. நாளை வரலாம்.

சரோ:—உங்களுக்கு அனுகூலமாகவே ஒரு சமாசாரம் நடந்திருக்கிறது அதைச் சொல்லட்டுமா? 715:418

சகுந்:—என்ன? சொல்லுங்கோ. N32

சரோ:—நேற்று எனக்கு பட்டணத்திலிருந்து என்னுடைய சிநேகிதர் ஒருவரிடமிருந்து கடிதம் வந்தது. அதில் உங்கள் husband-க்கு eyes defective-னு அவரை Medical Board reject பண்ணிவிட்டார்களாம் அதினாலே I. C. S. முடியாது. உங்களிஷ்டப்படி Revenue Inspector ஆகவோ அல்லது அவரிஷ்டப்படி College Professor வேலையோ பார்க்கலாம்.—அதிருக்கட்டும். இன்று சாயந்திரம் Gymkhana Club-ல் நான் Mixed Doubles Tennis Match விளையாடப் போகிறேன். நீங்கள் வந்து பாருங்கோ. 59205

சகுந்:—எங்காத்துக்காரருக்கு இதெல்லாம் பிடிக்காது. பொம்பளாட்டிகள் புருஷா ளெப்புக்குப்போய் கூட்டத்தில் Tennis Match பார்க்கப்போகச் செல்லமாட்டார. என்னுடைய அபிப்பிராயமும் அப்படித்தான். ஆனால் நீங்கள் ரொம்ப நாகரீகமுள்ளவா. உங்களுக்கு இதெல்லாம் சகஜம். சரி, நான் வருகிறேன். பத்மாசினி

பள்ளிக்கூடத்திலிருந்து வர நாழியாச்சு. நான் போய் சாதம் போடனும், நான் வரேன்.

(போகிறார்கள்.)

இரண்டாவது அங்கம்

காட்சி 1

மெட்ராஸ் கார்ப்பரேஷன் கட்டடத்தில்

பிரசிடெண்ட் ஆபீஸ்

(பிரசிடெண்ட் தீனதயாளு முதலியார் ஆபீஸ் பேப்பர்களை கையெழுத்துப் போட்டுக்கொண்டிருக்கிறார். குமாஸ்தா சங்கரன்பிள்ளை வேகமாய் வருகிறார்.)

தீனதயாளு முதலியார்:—என்ன Clerk இவ்வளவு Late-ஆ வந்தீர்! அடுத்த தடவை இப்படி late-ஆ வந்தா உம்மை Dismiss பண்ணிவிடுவேன்.

சங்கரன்பிள்ளை:—நான் என்ன சார் பண்ணுறது? நான் ஆபீஸுக்கு வரும்போது எஜமானை பார்க்கலாமுன்னுட்டு வீட்டுக்குப் போனேன். அதற்குள்ளாக எஜமான் ஆபீஸுக்கு வந்துட்டா போலிருக்கு. நான் உடனே அவசரமாய் புறப்படும்போது அம்மா குழந்தைக்கு Glaxo biscuits வாங்கித்தரச் சொன்னா? அதினால்தான் late ஆச்சு சார்.

தீன:— நான் உம்மை இன்னிக்கி சீக்கிரம் வரும்படி special-ஆ சொன்னதுக்கு இப்படி late ஆனீர். நான் president-ஆ அம்மா president-ஆ, சொல்!

சங்:— இங்கே நீங்கள்தான் president; வீட்டிலே அம்மா தான் president.

ராஜ:—இந்தா பார். இந்த கல்யாண விஷயத்தில் மட்டும் நான் சொன்னபடி கேள். இதுபரியந்தம் நான் உனக்கு எதிரிடையாய் ஏதாவது செய்திருக்கிறேனா? நீ கேட்ட நகைகளெல்லாம் நான் வாங்கிப்போடவில்லையா? அதிலும் இப்போ இரண்டு வருஷமாய் என் பணமெல்லாம் உன்பேருக்குத்தான் பாங்கிலிருக்கு. எனக்கு பொடி போட காலணாவுக்குக்கூட உன்னிடம் மனுப்போட வேண்டியிருக்கிறது. நீ எங்கேயாவது உன் சிநேகிதிகளோடு வம்பர் சபைக்கு போகணுமுனா நீ மோட்டார் காரை போட்டுக்கொண்டு போய்விடுகிறாய். அந்த சமயத்தில் நான் கோர்ட்டுக்குபோகணுமுனா ஜட்காவண்டியில் இடுப்பொடிய போகவேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் நான் ஏதாவது சொல்லுகிறேனா? இந்த கல்யாண விஷயத்தில் மட்டும் என் சொற்படி கேள்.

லலிதம்:—அதெல்லாம் முடியாது. நம்ம லெக்ஷ்மிக்கு இந்த தைமாசத்திற்குள் கல்யாணம் பண்ணவில்லையென்றால் நான் நாக்கை பிடுங்கிண்டு சாகிறேன். எனக்கு ஊர் வம்பு சகிக்கவே முடியாது. நீங்க இந்த சீர்திருத்த சபையில் சேர்ந்தது முதற்கொண்டு நம்ப ஆசாரமே போச்சு. நம்ப பழக்க வழக்கங்களையெல்லாம் விட்டு விட்டீர்கள். இந்த அவமானத்தை என்னால் சகிக்கவே முடியாது— வாடி, லெக்ஷ்மி, நம்ப உள்ளே போவோம். யாரோ வருகிற சப்தங்கேட்கிறது.

(லலிதமும் லெக்ஷ்மியும் உள்ளே போகிறார்கள். ராஜசேகரய்யர் மனசஞ்சலத்துடன் நாற்காலியில் சாய்ந்துகொண்டிருக்கிறார்.)

(தேவராயன் வருகிறான்.)

தேவ:—Sir, நீங்க இன்னிக்கென்ன ஒரு மாதிரியாயிருக்கிறேளே! What is the matter?

ராஜு:—என் wife வந்து நம்ம லெக்ஷ்மிக்கு தை மாசத்திற்குள் கல்யாணஞ் செய்யணுமுனு கட்டாயப்படுத்தினாள். நான் மாட்டேனென்றேன். She created a scene. Oh! our ladies are an obstinate lot. It is all want of education. நம்ம ladies இந்தமாதிரி conservative ஆயும் ignorant ஆயுமிருப்பதினால் தான் many of our social reformers lead double lives. They preach one thing and practise another.

தேவ:—நீங்களும் அந்த list-ல் சேர்ந்துவிடுவீர்கள்போலிருக்கிறதே! நான் உங்களை அப்பவே warn பண்ணியிருக்கிறேன்.

ராஜு:—No. I am a genuine social reformer. But you see my wife is very obstinate. நீ தான் என்னை இந்த difficulty-இ லிருந்து help பண்ணணும்.

தேவ:—அதற்கென்ன! இங்கே ஒருவருமில்லையே. ஒரு ரகசியம் உங்க wife ரொம்ப superstitious-னு நீங்கள் சொல்லியிருக்கேள். And besides you have told me that she has great faith in astrology. I will take advantage of her superstition and astrology. ஒரு தந்திரஞ்செய்யரேன் பாருங்கோ.

ராஜு:—என்ன செய்யப்போகிறாய்?

தேவ:—நான் முதலில் நம்ம Lady Propagandist Miss Sulochana-ஐ உங்க வீட்டுக் குவரச்சொல்லி உங்க

wife-னிடம் early marriage-னுடைய disadvantages-ஐ எடுத்துக்காட்டி, கல்யாணத்திற்கு அவசரப்படாமலிருக்கும்படி persuade பண்ணச்சொல்லரேன். அவள் என்ன சொன்னாலும் உங்க wife கேட்கமாட்டாள். In the meantime, ஒரு பேர்போன குறவன் குறத்தியை வரவழைத்து அவர்களை உங்க வீட்டுக்குப்போய் உங்க daughter கையைப்பார்த்து, "15 வயதில் ஒரு பெரிய கண்டம் வருகிறது. அதற்கப்புறந்தான் கல்யாணஞ்செய்யவேணும்" என்று சொல்லும்படி சொல்லிவிடுகிறேன். I will also write to that reputed astrologer, Vallabha Josier and ask him to go to your house, see the girl's horoscope and tell your wife that there should be no talk of marriage before the age of 15. What do you think of my ruse?

ராஜா:—குறிசொல்லுகிற குறவன் குறத்தியும், ஜோஸியரும், நீ சொல்லுகிறமாதிரி சொல்லுவார்களா! அதைப் பார்த்துக்கோ அப்பா!

தேவ:—உங்களுக்கென்ன அவ்வளவு தெரியவில்லை. இந்த குறி, ஜோஸியம் எல்லாம் fraud. பணத்திற்கு என்ன வேணுமானாலும் இந்தகுறி சொல்லரவன்கள், ஜோஸியர்கள் சொல்லுவார்கள். "Man proposes, finance disposes." சரி. நான்போய் arrange பண்ணரேன். நீங்கள் போய் வீட்டில் சரிப்படுத்துங்கோ.

(இருவரும் போகிறார்கள்.)

இரண்டாம் அங்கம்

காட்சி 1

மிஸ். சுலோசனா வீட்டில் ஓர் அறை

(மிஸ். சுலோசனா வாசித்துக்கொண்டிருக்கிறாள்.)
(தேவராயன் கதவை தட்டுகிறான்.)

மிஸ். சுலோ:—Who is there? Come in please.

(தேவராயன் வருகிறான்.)

தேவ:— Good morning.

மிஸ். சுலோ:— Good morning. Well, what is the news?

தேவ:— Mrs. Rajasekhara Aiyar தன்னுடைய daughter லக்ஷ்மிக்கு கல்யாணம் இந்த தைமாசத்திற்குள் பண்ணுமுறை கட்டாயப்படுத்துகிறாளாம். Mr. Rajasekhara Aiyar எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அந்த அம்மா பிடிவாதமாயிருக்கிறாளாம். நீங்கபோய் Mrs. Rajasekhara Aiyar இடம் அவா daughter லக்ஷ்மிக்கு இந்த சிறுவயதில் கல்யாணம் பண்ணுவதினாலுண்டான disadvantagesஐ சொல்லி marriage நடக்காமலிருக்கும்படி செய்யணும்.

மிஸ். சுலோ:—Oh yes! I shall deem it a privilege and a pleasure to do so.

தேவ:— This is a very important matter. Rajasekhara Aiyar's wife ரொம்ப obstinate. நம்ம prevent பண்ணலேன்னா marriage நடந்துவிடும். That will be a great blow to the Social Reform Movement. So you must try to

prevent the marriage by convincing Mrs. Rajasekhara Aiyar of its evil consequences. I hope you will be successful in your efforts.

மிஸ். சுலோ:— I hope so.

தேவ:— Thank you very much.

மிஸ். சுலோ:— Good morning.

(இருவரும் போகிறார்கள்.)

காட்சி 2

திவான் பகதூர் ராஜசேகரய்யரின் வீட்டில் ஓர் அறை

(லலிதம் பாகவதம் வாசித்துக்கொண்டிருக்கிறாள்.)
(மிஸ். சுலோசனா வருகிறாள்.)

லலிதம்:—வாருங்கோ. உங்களை யாருனு தெரியலையே!

மிஸ். சுலோ:—என்னை சுலோசனா என்றழைப்பார்கள்.

லலிதம்:—உங்க ஆத்துக்காரருக்கு என்ன வேலை? உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?

மிஸ். சுலோ:—எனக்கு கல்யாணமே ஆகவில்லை. நான் மிஸ். சுலோசனா. நான் இந்த ஊர் சீர்திருத்த சபையைச் சேர்ந்தவள்.

லலிதம்:—என்னருக்கு! உங்களுக்கு 25 வயசாயிருக்கும்போலிருக்கிறது. இன்னும் கல்யாணமாகவில்லையா? நீங்களென்ன புருஷாள்மாதிரி தலைமயிரை கத்திரித்துக் கொண்டிருக்கேள்? ரொம்ப நாகரீகமாயிருக்கே!

மிஸ். சுலோ:—நாகரீகமாயிருந்தால் என்ன கெடுதல்? தலை crop பண்ணினால் என்ன தோஷம்? கல்யாணம் பண்ணிக்காவிட்டால் என்ன குடிமுழுகிப்போகிறது? ஒவ்வொரு ஸ்திரியும் கட்டாயமாய் கல்யாணம் பண்ணிக்கணுமென்று எந்த சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது?

லலிதம்:—நீங்கள் இங்கிலீஷ்காரிமாதிரி பேசரேள். எனக்கு அவ்வளவு சாதுரியமாய் பேசமுடியாது. ஆமாம், நீங்க வந்த சமாசாரமென்ன?

மிஸ். சுலோ:—நீங்கள் உங்க பெண் லெட்சுமிக்கு கல்யாணம் இந்தமாசத்திற்குள் பண்ணணுமுனு சொல்லரேளாம். அதினாலுண்டான கெடுதல்களை உங்களிடஞ் சொல்லலாமென்று வந்தேன்.

லலிதம்:—நீங்கள் சொல்லரதை சொல்லுங்கோ. நீங்கள் சாஸ்திரப்படிக்கு நடக்காதவள். நான் சாஸ்திரத்திற்கு கட்டுப்பட்டவள். நீங்கள் சொல்லரது எப்படி என் காதிலேறும்?

மிஸ். சுலோ:—உங்கள் பெண்ணுக்கு இந்த சிறுவயதில் கல்யாணம் பண்ணினால் அவள் படிப்புக் கெட்டுப்போம்.

லலி:—கெட்டுப்போனால் போகட்டும்.

மிஸ். சுலோ:—உங்கள் குழந்தைக்கு படிப்பிருந்தால் அறிவு விருத்தியாகும். நீங்கள் படிப்பு வேண்டாமென்கிறீர்களே!

லலி:—படிப்பினால் அறிவு ஏற்படாது. எத்தனை படித்த முட்டாள்களை நாம் பார்க்கிறோம்.

மிஸ். சுலோ:- (asirle) What wonderful logic is this? மேலும், பால்ய விவாகம் உடம்புக்கு மிகவுங்கெடுதல்.

லலி:— இந்தக்காலத்துப் பெண்கள் உடம்பு கெட்டுப் போவதற்கு காரணம் பால்ய விவாகமில்லை. இங்கி

லீஷ் படிப்பு, காப்பி குடித்தல், சோப்பு தேய்த்துக் கொள்ளுதல், தைலம்வைத்து தலைவாரிக்கொள்தல் முதலியன.

மிஸ். சுலோ:—என்ன அம்மணி! நீங்கள் இந்த மாதிரி பேசுகிறீர்களே! இப்போ ஓர்சட்டம் கவர்மெண்டு பாஸ் பண்ணப்போராள். அதன்படி நம்ம பெண்களுக்கு 14 வயசுக்கப்புறந்தான் கல்யாணம் பண்ணணுமாம். அதற்கு முன்னால் பண்ணினால் யார் எல்லாம் கல்யாணத்தில் சம்பந்தப்படுகிறார்களோ அவர்களெல்லாம் தண்டனைக் குட்படுவார்கள். ஆகையினால் நாம் அந்த சட்டத்தின்படி நடப்பது நல்லது.

லலி:—நாம் எப்ப நம்ம பெண்ணுக்கு கல்யாணம் பண்ணினாலென்ன இந்த கவர்மெண்டுக்கு? நல்ல கவர்மெண்டு! இனிமேல் ஜாதிவிட்டு ஜாதி கல்யாணம் கட்டாயம் பண்ணணுமுனு சட்டம் போடுவார்கள் போலிருக்கிறதே!

மிஸ். சுலோ:—அது போகட்டும். இப்ப நீங்க உங்க பெண்ணுக்கு கல்யாணம் பண்ணினால் உங்க ஆத்துக்காரர் பேர் கெட்டுப்போம்.

லலிதம்:—நம்ம லெக்ஷிமிக்கு கல்யாணம் பண்ணலேனா என்பேர் கெட்டுப்போம். அதற்கு நீங்க என்ன சொல்லுகிறீர்கள்?

மிஸ். சுலோ:--அம்மணி, உங்களுடன் பேச என்னால் முடியாது. நான் வரேன். உங்களுடைய நன்மைக்காகத் தான் சொல்ல வந்தேன்.

லலிதம்:—போய் வாருங்கோ. வந்ததற்கு வெற்றிலை பாக்கு எடுத்துக்கொள்ளுங்கோ. (லலிதம் வெற்றிலை பாக்கு

ஒரு தட்டில் வைத்து மிஸ். சுலோசனாவிடம் கொடுக்கிறான்).
நீங்கள் ஏதோ ஒரு சட்டத்தைப்பற்றி சொன்னேளே. அது பாஸ்பண்ணுகிறதற்கு முன்னால் நம்ம லெக்ஷ்மிக்கு கல்யாணஞ் செய்துவிடவேண்டும். நீங்க போய் வாருங்கோ.

(இருவரும் போகிறார்கள்.)

காட்சி 3

தேவராயன் வீட்டின் வாசற் பக்கம்

(குறவன் குறத்தி பாடிக்கொண்டு வருகிறார்கள்)
(பாட்டைக்கேட்டு தேவராயன் வருகிறான்.)

தேவ:—ஏ குறவா! நீ தானா பேர்போன குறவன்?

குறவன்:—ஆமங்க. என்பேரெல்லாம் என் பெஞ்சாதினாலே.

தேவ:—உன் பெண்சாதிக்கு நன்றாய் குறி சொல்லத் தெரியுமா?

குறவன்:—தெரியும். நன்னாதெரியுங்க. ஏ ராக்கம்மா, நீயுஞ் சொல்லே.

குறத்தி:—நான் நல்லா குறி சொல்லுவேனுங்க.

தேவ:—நீங்க இரண்டு பேரும் எனக்கு ஒரு காரியம் பண்ணணும். நீங்க அந்த பெரிய வக்கீல் ராஜசேகரய்யர் வீட்டுக்குப்போய் அவர் வீட்டு அம்மா கிட்டக்க நன்னா குறி சொல்லத் தெரியுமுனு சொல்லு. அந்த அம்மாவுக்கு குறியிலே ரொம்ப நம்பிக்கை. உடனே தன் பெண் கையைப்பார்த்து சொல்லச் சொல்லுவான். நீ அந்தக் குழந்தை கையைப்பார்த்து "இந்த பெண்ணுக்கு 15 வயசு மட்டும் கல்யாணமே செய்யக்கூடாது.

செய்தால் ஒரு பெரிய ஆபத்து வருமென்று சொல்லணும். ஏ குறவா, நான் சொன்னேனு மாத்திரஞ் சொல்லிவிடாதே. இந்தா உனக்கு 10 ரூபாய்.

(10 ரூபாய் கொடுக்கிறான்.)

குறவன்:—சாமி, நீங்க சொன்னபடி என் பெஞ்சாதி சொல்லிடுவாள். ரவுசியத்தை ஒத்தரிடமுஞ் சொல்லவில்லை. சாமி, வரேன்.

(போகிறார்கள்.)

காட்சி 4

திவான் பஹதூர் ராஜசேகரய்யர் வீட்டில் ஓர் அறை

(ராஜசேகரய்யர் வாசித்துக்கொண்டிருக்கிறார்)
(லலிதம் வருகிறாள்.)

ராஜ:—என்ன சமாசாரம்?

லலிதம்:—நம்ம லெக்ஷ்மி கல்யாண விஷயம் எப்படி உறுதி பண்ணிண்டேள். இப்போ யாரோ மிஸ். சுலோசனாவாம் அவள் வந்து கல்யாணம் பண்ணுவதினாலுண்டாகும் பிரதிகூலங்களைபற்றி என்னிடம் பிதற்றிவிட்டுப் போனாள். அவளுக்கு குட்டிச்செவருக்கு ஆகிறாப்போல் வயசு 25 ஆகியும் அவள் கல்யாணஞ்செய்து கொள்ளவில்லையாம். வாலிழந்த நரி கதை போல, இவள் நம்ம லெக்ஷ்மிக்கு கல்யாணம் இப்பவேண்டாமென்று நரங்கி பண்ணினாள். அவள் என்ன நெளிப்பு நெளிக்கிறா! என்ன குலுக்கு குலுக்கிறா! அவள் ஏதோ ஓர் சட்டம் வரப்போகிறதாக சொன்னாள். அதன்படி நம்ம பெண்களுக்கெல்லாம் 14 வயசக்கப்

புறந்தான் கல்யாணம் பண்ணனுமாம். அதற்கு முன்னால் பண்ணினால் கல்யாணத்தில் சம்பந்தப்பட்டவர்களை தண்டனை செய்வார்களாம். அதினாலே அந்த சட்டம் பாஸ் பண்ணுமுன் நம்ம லெக்ஷ்மிக்கு கல்யாணம் பண்ணித்தான் தீரவேணும்.

ராஜ:—நீ அவ்வளவு முரண்டு பண்ணினா நான் என்னசெய்கிறது. சரி. அப்படியே செய்துவிடுவோம். இன்று நம்ம வல்லப ஜோஸ்யர் வருவார். அவரிடம் குழந்தை ஜாதகத்தை கொடுத்து விவாஹாநுகூலமிருக்கா என்று முதலில் பார்ப்போம். பிற்பாடு வரன் தேடுவோம்.

லலி:—சரி, அதெற்கென்ன! நான் இவ்வளவு தூரம் உங்களை கல்யாணத்துக்கு கட்டாயப்படுத்தின காரணம் – நம்ம குடும்பத்தைப்பற்றி பத்துபேர் பத்துவிதமாய் சொல்லுவாளே என்பதுதான்.

(குறவன் குறத்தி பாடுகிற சப்தங்கேட்கிறது.)

ராஜ:—அடியே, யாரோ ஒரு குறி சொல்லுகிற குறவன் குறத்தி வந்திருக்காப் போலிருக்கு. அவர்கள் பாடுகிற சப்தங்கேட்கிறது. நாம் வாசலில் போய் நம்ம குட்டி கையை அவர்களிடம் காட்டுவோமா?

லலி:--அதற்கென்ன? அன்னிக்கு பாருங்கோ, ஒரு குறி சொல்லுகிறவன் அவாத்து சேஷி பெண் கையை பார்த்து கல்யாணம் நடக்குமுனு சொன்னான். அதற்கு நேர் எட்டாநாள் அந்தப் பெண்ணுக்கு கல்யாணம் நிச்சியமாச்சு. நம்ம குட்டியை கூட்டிண்டு வாசலில் போவோம்— லெக்ஷ்மி, லெக்ஷ்மி.

[லெக்ஷ்மி வருகிறள்.]

லெக்ஷ்மி:— என்னம்மா! என்னை எதற்காக கூப்பிட்டேள்?

லலி:—யாரோ ஒரு குறி சொல்லுகிற குறவன் குறத்தி வந்திருக்கிறார்கள். அவாளிடம் உன் கையை காமிக்கணும். வா, போவோம்.

[எல்லாரும் வாசல் பக்கத்திற்கு போகிறார்கள்.]

காட்சி 5

திவான் பஹதூர் ராஜசேகரய்யரின் வீட்டின் வாசற்பக்கம்

[குறவன் குறத்தி பாடிக்கொண்டிருக்கிறார்கள்.]

[ராஜசேகரய்யர், லலிதம், லெக்ஷ்மி வருகிறார்கள்.]

குறவன்:--சாமி, அடியேன் வந்தனம்.

ராஜ:—உனக்கு குறிசொல்லத் தெரியுமா?

குறவன்:—அடியேனுக்கு தெரியாது. என் பெஞ்சாதி நல்லா பாத்து சொல்லுவா.

ராஜ:—ஏ! குறத்தி. உனக்கு குறிசொல்லத் தெரியுமா?

குறத்தி:—தெரியுஞ்சாமி.

ராஜ:—உனக்கு எந்த ஊர்?

குறத்தி:—("பச்சைமலை பவழமலை எங்களது நாடு" என்ற பாட்டை பாடுகிறள்.)

லலி:—உன் பாட்டு போரும். எங்க குழந்தை கையைப் பார்த்து குறி சொல்லு பார்ப்போம்.

(குறத்தி தனது இஷ்ட தேவதையை வணங்குகிறாள். கொஞ்ச நேரங்கழித்து ஆவேசம் வருகிறது. ஆடுகிறாள்.)

லெக்ஷ்மி:--அம்மா, எனக்கு பயமாயிருக்கு.

லலிதம்:--நாங்களெல்லாமிருக்கிறபோது உனக்கு என்னடி பயம்.

குறத்தி:--அம்மா, இந்தப்பெண் நல்ல அதிட்டசாலி. ஆனால் 15 வயசு முடியுமுன்ன நீங்கள் கல்லாணம் பண்ணினா இந்தப் பெண்ணுக்கு பெரிய ஆபத்து வரும். நீங்கள் நான் சொல்லர வார்த்தையை தட்டி கல்யாணம் பண்ணினேளோ அப்புறம் உங்க பெண் உங்களுக்கு தக்காது.

லலி:—(கவலையுடன்) நீ சரியாப் பார்த்துச் சொன்னயா?

குறத்தி:—என்னுடைய குறி தப்பாது, அம்மா. நான் வரேனுங்க.

லலி:—உனக்கு என்னடி வேணும்.

குறத்தி:-ஒரு பழம்புடவையும், ஒருபடி அரிசியுங்கொடுங்க.

ராஜ:—என்னடி, இப்படி குறி சொல்லியிருக்காளே. நம்ம லெக்ஷ்மிக்கு எப்படி கல்யாணம் பண்ணரது?

லலி:—எனக்கும் இப்ப மனசு கொஞ்சம் தயங்குகிறது. நான் அன்னிக்கு லெட்சுமி கல்யாண விஷயமாய் பேச வரும்போது சகுனத்தடைபோல நீங்கள் சள்புன்னு விழுந்தேள். அப்பவே எனக்கு சருக்னது. இப்போ குறத்தியும் அசம்பா விதமாய் குறி சொல்லியிருக்கிறாள். எல்லாத்துக்கும் வல்லப ஜோஸ்யர் இன்னிக்கு வருவருனு சொன்னேளே, அவரிடம் குட்டி ஜாதகத்தைப் பார்த்து கண்டமிருக்கானு பார்ப்போம். சரி. குறத்தி கேட்டதை அவளுக்கு கொடுத்தனுப்பிவிடறேன்.

(எல்லோரும் போகிறார்கள்.)

காட்சி 6

திவான் பஹதூர் ராஜசேகரய்யரின் வீட்டில் ஓர் அறை.

(ராஜசேகரய்யரும் லலிதமும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.)

லலி:--குறி சொன்னதுமுதற்கொண்டு எனக்கு மனசு சமாதானமாயில்லே. ஜோஸ்யர் இப்ப வருவர்னேளே. இன்னும் வரவில்லையே.

(வல்லப ஜோஸ்யர் வருகிறார்.)

ராஜ:--ஜோஸ்யரவாள் வாருங்கோ!

வ. ஜோ:—நம்ம குழந்தைக்கு இந்த தைமாசத்திற்குள் கல்யாணஞ் செய்யப்போவதாக கேள்விப்பட்டேன். எதாவது வரன்கள் ஜாதகம் வந்திருக்குமே பொருத்தம் பார்க்கலாமுனு வந்தேன்.

ராஜ:--இன்னும் வரன்கள் ஜாதகம் வரவழைக்கவில்லே. குட்டி ஜாதகத்தைப்பார்த்து வியாழா நுகூலமிருக்கானு பாருங்கோ!

வ. ஜோ:—ஆஹா! அதெற்கென்ன! குழந்தை ஜாதகத்தை கொண்டு வாருங்கோ!

ராஜ:—அடியே. குட்டி ஜாதகத்தைக் கொண்டுவா.

லலி:—இதோ கொண்டுவரேன்.

(லலிதம் போகிறாள்.)

வ. ஜோ:—ஜாதகம் அம்மாகிட்டத்தானிருக்கோ?

ராஜ:—எல்லாம் அம்மாகிட்டத்தான். பணம், முக்கியமான ரிக்கார்டு, எல்லாம் அம்மாகிட்டத்தான். நம்மாத்திலே Home Rule.

வ. ஜோ:--அது சொல்லாமலே தெரிகிறது!

(லலிதம் ஜாதகத்துடன் வருகிறாள்.)

லலி:—இந்தாருங்கோ.

(ஜாதகத்தை ஜோஸ்யரிடம் கொடுக்கிறள்).

(ஜோஸ்யர் ஜாதகத்தை கவனமாய் பார்த்து கணக்கு பண்ணுகிறர்).

வ. ஜோ:--பெண் ஜாதகம் நல்லதுதான். ஆனல் அவளுக்கு இப்ப நடக்கிற திசை நன்ருயில்லை. இப்ப அவளுக்கு 8-வயசோனே. இன்னும் 7-வருஷம் இந்த கெட்ட திசையோடுகிறது. அப்போ என்ன சுபகாரியம் நடத்தினலும் அது அசுபமாமுடியும். கல்யாணம் பண்ணினல் மாப்பிள்ளைக்கு களத்திர தோஷமிருந்து கல்யாணம் பண்ணின நாலாம்நாளேபெண்ணை படித்துவிடும். அதினல் இந்த திசை கழியும்வரை கல்யாணப்பேச்சே வேண்டாம்.

லலி:—இந்தக் கெட்டதிசை எப்போ போகிறது?

வ. ஜோ:—குழந்தைக்கு 14 வயசு 8 மாசம் ஆனபிற்பாடு போகிறது. அதற்கு பிற்பாடு கல்யாணம் பண்ணாது தானே!

லலி:—பெண் அதற்குள் பெரியவளாய் விடுவளே என்ற கவலையிருக்கு. சாஸ்திரப்படி பெரியவளாவதற்கு முன் கலியாணஞ் செய்யணுமே!

வ. ஜோ:—அதற்கு நாம் என்ன பண்ணுவது? ஆபத்திற்கு பாபமில்லை.

லலி:—ஜோஸ்யரவாள் இப்படிச் சொல்லும்போது நாம் என்ன செய்வது? நமக்கு குழந்தைதான் பெரிசு. கல்யாணத்தைப்பற்றி அப்புறம் யோசிக்கலாம். குறத்தி குறி சொன்னதற்கு அனுசரணையாய் இவரும் ஜோஸ்யஞ் சொல்லும்போது மனசு கேட்கிறதா? இவ்வளவு விகாதங்களிருக்கும்போது கல்யாணத்தைப்பற்றி மனது ஓடுமோ? சரி அப்புறந்தான் பார்க்கணும்.

ராஜ:—சரி அப்படியே செய்வோம். குழந்தைக்கு 15 வயசான பிற்பாடு கல்யாணம் பண்ணுவோம். அதற்குள்ளாக இந்த கெட்ட திசையும் போய் விடும். ஜோஸ்யரவாள், போஜனம் இங்கேயே வைத்துக்கொள்ளுகிற தானே!

வ. ஜோ:--அதற்கென்ன? நான் நதிக்குப்போய் மாத்தியான்னிகம் பண்ணிவிட்டு வருகிறேன்.

(ஜோஸ்யர் போகிறர்.)

ராஜ:--அடியே, ஜோஸ்யர்வாளும் சாப்பிடுவார். பரிசாரகனை இலைபோடச்சொல்லு.

லலி:—ஆஹா! அப்படியே. (போகிறள்.)

(தேவராயன் வருகிறன்.)

ராஜ:—Mr. Devarayan, I must thank you very much. You have got me out of the difficulty. My wife does not know anything of the trick. Your Kuravan, Kurathi and Josier did their parts well and my wife was deceived. ஆனல் நம்ம மாதிரி Social Reformers இந்த மாதிரி crooked methods adopt பண்ணவேண்டியிருக்கிறதே என்று எனக்கு வருத்தம்.

தேவ:—We can't help it. This is a necessary stage in our Social Reform movement. நம்ம ladies obstinate ஆயும் ignorant ஆயும் இருக்கிறதினல் இது மாதிரி செய்யவேண்டியிருக்கிறது. நம்ம Social Reform League மாதிரி ஒவ்வொரு village-லும் town-லும் ஒரு Social

Reform League ஏற்படுத்தி நம்ம people-க்கு especially ladiesக்கு Sarda Billனுடைய advantages-ஐ எடுத்துகாட்டினால், we can stamp out this curse of early marriage from our country.

ராஜ:—I quite agree with you. சரி, நீயும் நம்மாத்திலே சாப்பாடு வைத்துக்கொள்ளேன்.

தேவ:—அதற்கென்ன! அப்படியே.

(போகிறார்கள்.)

முற்றிற்று

ERRATA

Page	Line	Read	For
13	18	காதர்பாச்சா	K. B. சுந்தராம்பாள்
,,	25	Kadir Baksha's	Sundarambal's
17	21	funds	accounts
36	23	நன்று	வியர்த்தமாய்

சென்னை-600 008
நூலகம்